Regd. No. M 3473

963
COIMBATORE PUBLIC LIBRARY
16 MAY 1963

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணுமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 28	சோபகிருதுஸு பங்குனி – சித்திரைமீ 1963 ஏப்ரல்	பகுதி 1

பத்திரிகாசிரியர் குழுவின் அங்கத்தினர்

1. திருவாளர் A. K. ஸீதாராமன், B.A., L.T., (ஆசிரியர்)
2. ,, T. S. ராஜகோபாலன், B.A., L.T., (வெளியிடுவோர்)
3. ,, L. மரியப்பிரகாசம், B.A., L.T., J.P.
4. ,, C. ரங்கநாத ஐய்யங்கார், M.A., L.T. (பத்திரிகைக் காரியதரிசி)
5. ,, P. V. ராமஸ்வாமி, B.A., L.T. (பத்திரிகைக் கூட்டுக் காரியதரிசி)
6. ,, V. S. சரவணன்
7. ,, P. ராமச்சந்திரன்
8. ,, G. ஸ்ரீநிவாஸாச்சாரி
9. ,, M. P. சுப்பிரமணியம்
10. ,, M. S. அருள்சாமி

நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00] [தனிப் பிரதி 25 ந.பை.



M. ராஜா அய்யர்

உயர்திரு. M. ராஜா அய்யர் அவர்கள் 1912-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியன்று பிறந்தார்; மதுரை சௌராஷ்டிர உயர்நிலைப் பள்ளியிலும் அமெரிக்கன் கல்லூரியிலும் கல்வி பயின்றார். 1933-ஆம் ஆண்டு முதல் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்திற்கு உழைத்து வந்திருக்கிறார்; இந்தச் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராகப் போற்றத் தகுந்த வகையிற் பணியாற்றி வந்தார்; கடந்த ஆண்டில் மதராஸில் நிகழ்ந்த கல்வி மகாநாட்டில் உபத்தலைவராகத் (Vice-President) தேர்வு பெற்றுள்ளார். இராமநாதபுரம் மாவட்ட ஆசிரியர் சங்கத்தின் தலைவராக உழைத்துள்ளார்; இப்போது இராமநாதபுரம் மாவட்டத்துத் தலைமையாசிரியர் சங்கத்துத் தலைவராக திகழ்ந்து வருகிறார். இராச்சியக் கல்வி மாநாடுகளிலே முக்கியமான பங்கு கொண்டு கிளைக் கூட்டங்களை (Sectional Conferences) நிறுவி நடத்தி வந்திருக்கிறார். இராமநாதபுரத்தில் விவேகானந்த அரிசின விடுதி (Hostel)யை நிறுவிச் செயலாற்றி வருகிறார். இராமநாதபுரம் ராஜா உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசியர், சட்டசபை அங்கத்தினர், இவ்வாண்டு மாநில மாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார். இவர் ஊக்கங்குன்றுமல் நீடுழி வாழ்ந்து ஆசிரியர்க்கும் சிறுவர் சிறுமியர்க்கும் தொண்டாற்றவேணுமென்று இறைவனை இறைஞ்சுகின்றனம்.

பொருளடக்கம்

1.	யாம்	...	1
2.	செயலாளர் எழுதும் கடிதங்கள்	....	3
3.	ஜியோமிதி—பாரதம் அளித்த வகை	....	4
4.	மருத்துவமும் விஞ்ஞானமும்	....	8
5.	விஞ்ஞானச் செய்திகள்	...	10
6.	பண்ணைச் செய்திகள்	....	11
7.	செய்தித்திரட்டு	...	12
8.	எகோ (ECHO)	...	15

பாலர் கல்வி

பொருளடக்கம்—தொகுதி 28

பகுதி—1 Page

1. யாம் 1
2. செயலாளர் எழுதும் கடிதங்கள் 3
3. ஜியோமிதி—பாரதம் அளித்த வகை 4
4. மருத்துவமும் விஞ்ஞானமும் 8
5. விஞ்ஞானச் செய்திகள் 10
6. பண்ணைச் செய்திகள் 11
7. செய்தித் திரட்டு 12
8. எகோ (ECHO) 15

பகுதி—2

1. தென்னிந்திய ஆசிரியர் சங்கம் 31
2. செயலாளன் எழுதுங் கடிதங்கள் 34
3. மெட்ரிக் முறை அளவுகள் 35
4. கணித விளையாட்டுகள் 39
5. ஸபேசன் பால பிருந்தாவனம் 40
6. பண்ணைச் செய்திகள் 41
7. செய்தித் திரட்டு 42
8. எகோ (ECHO) 43

பகுதி—3

1. ஆரம்பக் கல்வி கருத்தரங்கு 55
2. 53ஆம் ஆண்டு சென்னை இராச்சியக் கல்வி மாநாடு 58
3. கல்வி மகாநாட்டில்கூடிய கருத்தரங்குகள் 60
4. பண்ணைச் செய்திகள் 62
5. செய்தித் திரட்டு 64
6. எகோ (ECHO) 65

பகுதி—4

1. தென்னிந்தியா ஆசிரியர் சங்கம்—இயக்க குழுவின் கூட்டம் 79
2. செயலர் கடிதங்கள் - 1 80
3. ஆரம்பக் கல்விக்கான வசதிகள் 82
4. எளிய சாதனங்களைப் பயன்படுத்தல் 83
5. கோவை 53-வது இராச்சியக் கல்வி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 85
6. ஆரம்பக் கல்வியின் அற்புத முன்னேற்றம் 86
7. திரு ஜி. ஆர். தாமோதரன் 88
8. எகோ (ECHO) 89

பகுதி—5

1. ஒரு குறை 103
2. தென் இந்திய இராச்சிய ஆசிரியர் சங்கங்களின் இணைப்பு ... 104
3. முக்கிய குறிப்புக்கள் 105
4. உழைப்பால் உயர்ந்த உத்தமர் 106
5. ஐந்து வகுப்பு வரையில் தமிழ் எழுதுதலும், படித்தலும் கற்பித்தல் 107

6. செயற்கை கோள் வழியே செய்திகளை அச்சடித்த புதுமை 110
7. நமது தபால் பெட்டி 112
8. எகோ (ECHO) ... 113

பகுதி—6
1. பாடதிட்டம் சீரமைப்பு ... 127
2. பாராட்டு 129
3. நாம் குருவுக்குச் செய்யவேண்டிய கடமை 132
4. செயலர் எழுதுங் கடிதம் (2) 133
5. அதிசயம் ஆனால் உண்மை ... 134
6. நெல்லை மாவட்ட ஆசிரியர் கழகம் ... 136
7. எகோ (ECHO) ... 137

பகுதி—7
1. பாராட்டுகின்றோம் 151
2. ஆசிரியர் நிலையை உயர்த்துதல் 152
3. ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் தமிழ் இலக்கணம் போதித்தல் எழுத்தும், சொல்லும் 159
4. திறனுறக் கற்பித்தல் ... 161
5. எகோ (ECHO) 163

பகுதி—8
1. தென் இந்தியக் கல்வி வாரம் 175
2. பாட திட்ட உட்குழு ... 177
3. முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை தமிழ் இலக்கணம் போதித்தல் ... 178
4. எகோ (ECHO) 183

பகுதி—9
1. அறிவும், ஆற்றலும் 199
2. முதல் ஐந்து வகுப்பு வரை இலக்கணம் கற்பித்தல் 202
3. சேரன் மகாதேவி ரேஞ்சு உதவிபெறும் ஆரம்பப் பாடசாலை... 205
4. செய்தித் திரட்டு ... 205
5. பாலர் கல்விக்கேற்ற துணைக்கருவிகள் 207
6. பாலர் வகுப்பு 209
7. எகோ (ECHO) 211

பகுதி—10
1. கல்விச் செல்வம் ... 223
2. நம் தலைவரின் மறைவு ... 224
3. சுவாமி விவேகானந்தரின் தாய்நாட்டுத் திருப்பணி ... 225
4. முதல் ஐந்து வகுப்பு வரையில் இலக்கணம் போதித்தல் 228
5. ஆரம்பப் பள்ளிக்கு நிரந்தரமாய் வேண்டிய துணைக் கருவிகள் ... 231
6. போதனுமுறைச் சாதனங்கள் 233
7. எஃகோ (EDUCATIONAL ECHO) ... 236

பகுதி—11
1. ஆசிரியர்கட்கு ஒரு வேண்டுகோள் ... 247
2. மலேயா ஆசிரியர் சுற்றுலா ... 248
3. ஜியோமிதி கற்பித்தல் ... 249
4. முதல் ஐந்து வகுப்புவரை தமிழ் இலக்கணம் போதித்தல் ... 250
5. "க்யூ" தர்பார் ... 254
6. எகோ (ECHO) ... 261

பொருளடக்கம்

தென்னிந்திய ஆசிரியர் சங்க நிருவாகக் குழுவினர் கூட்டம்	...	271
தமிழாசிரியர்களின் வேலைப்பளுவைப் பற்றிய அறிக்கை	....	274
ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை	...	279
எகோ (ECHO)	...	281

BALAR KALVI

1.	Place of publication	...	Raja Annamalaipuram
2.	Periodicity of its publication	...	Monthly
3.	Printer's Name	...	S. Venkataraman
	Nationality	...	Indian
	Address	...	Hind Press, Madras-28.
4.	Publisher's Name	...	Sri T. S. Rajagopalan, B.A., L.T.
	Nationality	....	Indian
	Address	...	S.I.T.U. at Raja Annamalaipuram, Madras-28.
5.	Editor's Name	...	Sri A. K. Sitaraman, B.A., L.T.
	Nationality	...	Indian
	Address	....	S.I.T.U. at Raja Annamalaipuram, Madras-28
6.	Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.		The S. I. T. U. at Raja Annamalaipuram Madras-28.

I, Sri T. S. Rajagopalan, B.A., L.T., hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1—3—64 Signature of publisher : T. S. RAJAGOPALAN

Printed by Sri S. Venkataraman at The Hind Press Private Ltd. 113, Ramakrishna Math Road, Madras-28. Published by Sri T. S. Rajagopalan, B.A., L.T., for the S.I.T.U. at Raja Annamalaipuram, Madras-28.

Editor : Sri A. K. Sitaraman, B.A., L.T.

Regd. No. M 3473

21 MAR 1964
MADRAS

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)
ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 28	சோபகிருது௵ - மாசி பங்குனிமீ 1964 மார்ச்	பகுதி 12

பத்திரிகாசிரியர் குழுவின் அங்கத்தினர்

1. திருவாளர் A. K. ஸீதாராமன், B.A., L.T., (ஆசிரியர்)
2. ,, T. S. ராஜகோபாலன், B.A., L.T., (வெளியிடுவோர்)
3. ,, L. மரியப்பிரகாசம், B.A., L.T., J.P.
4. ,, C. ரங்கநாத அய்யங்கார், M.A., L.T., (பத்திரிகைக் காரியதரிசி)
5. ,, P. V. ராமஸ்வாமி, B.A., L.T., (பத்திரிகைக் கூட்டுக் காரியதரிசி)
6. ,, V. பூவராகமூர்த்திராவ், B.A., L.T., (பத்திரிகைக் கூட்டுக் காரியதரிசி)
7. ,, V. S. சரவணன்
8. ,, P. ராமச்சந்திரன்
9. ,, G. ஸ்ரீனிவாசாச்சாரி
10. ,, M. P. சுப்பிரமணியம்
11. ,, M. S. அருள்சாமி

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00] [தனிப் பிரதி 25 ந.பை.

பாலர் கல்வி

தொகுதி 28	சோபகிருதுஸ் பங்குனி - சித்திரைமீ 1963 ஏப்ரல்	பகுதி 1

யாம்

யாம் இவ்வுலகில் தோன்றி 27 ஆண்டுகள் முடிவுறுகின்றன; வரும் சித்திரை மாதம் முதல் இருபத்தெட்டாவது ஆண்டு நடைபெறும். இது சாறும் பள்ளியாசிரியர்களது நலனுக்குப் பெரிதும் உழைத்து வந்தோம்; அவ்வப்போது சிறிது மெலிவும் கவலையும் நிலவி வந்தன, எமக்கு. வருகிற சித்திரை முதல் எமது மதிப்பும் பொருளடக்கமும் மிகவும் ஓங்குமென்று கேள்வியுறுகிறோம். வழக்கம்போல் வெளிவரும் விஷயங்களன்றிப் பின் வருவன எமது இதழ்களில் இடம் பெறும்: (1) கணக்கு, விஞ்ஞானம் முதலியன கற்பிப்பதற்கான சிறு குறிப்புகள், (2 சிறந்த ஆசிரியர்களைப் பற்றிய குறிப்புகள், (3) எகோ (Echo) என்ற மாதச் சஞ்சிகையின் தமிழாக்கம் பதிப்புக் குழுவினர் மிகவும் ஊக்கங் கொண்டு, யாம் நல்லவகையில் பணியாற்ற வேண்டிய முயற்சிகளைச் செய்து வருகின்றனர். ஆசிரியர்களது ஆதரவும் கல்வியில் ஊக்கங் கொண்டுள்ள பொதுமக்களின் ஆதரவும் கொண்டு எமது நூலை மேலும் ஓங்குமென நம்புகிறோம். ஆசிரியர்க்கும் மற்றப் பெரியோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் !

ஆசிரியர்களுக்குப் பாராட்டு

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு சர்க்கார் விருது அளிப்பு விழா, வெள்ளிக்கிழமையன்று சென்னையில் ராஜாஜி ஹாலில் நடைபெற்றது. முதன் மந்திரி திரு காமராஜ் தலைமை ஏற்றார், கவர்னர் ஸ்ரீ மேதி விருதுகளை வழங்கினார். விருதுபெற்றவர்கள் ஒரு வெள்ளிப் பதக்கமும், ஒரு நற்சாட்சிப் பத்திரமும், ரூ. 100 பரிசுப் பத்திரமும் பெற்றனர். இவ்வாறு பரிசுப்பெற்றவர்கள்:

சென்னை-தெற்கு: ஸ்ரீ. கே. சி. பத்மநாபன், சென்டினரி துவக்கப்பள்ளி, மயிலை, ஸ்ரீ. என். சின்னதுரை நாயகர், ஸ்ரீ. ராஜராஜேஜச்வரி பாடசாலை, மயிலை.

சென்னை-வடக்கு: ஸ்ரீ. எஸ். துளசிங்கம், பி. சுப்பராயர் இலவச உயர்நிலை துவக்கப்பள்ளி, மதராஸ்-21. ஸ்ரீ. சி. ர. மாரியண்ண, மதராஸ் விருதுநகர் நாடார் உயர்நிலைத் துவக்கப் பள்ளி, மதராஸ்-21

செங்கற்பட்டு: ஸ்ரீ. வி. ஜயராவ், பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக்கப்பள்ளி, வில்லிவாக்கம்; ஸ்ரீ. ஆர். வெங்கடேசன், பஞ்சாயத்து யூனியன் உயர்நிலைத் துவக்கப் பள்ளி, அச்சரப்பாக்கம்.

வேலூர்: ஸ்ரீ. ஆர். தங்கவேலு நாய்க்கர், மாதவ மந்திரம் துவக்கப்பள்ளி சோளசிங்கபுரம், ஸ்ரீ. எம். தங்கவேலு முதலியார், பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக்கப்பள்ளி, வேட்டுவாக்கம், பள்ளிகொண்டா.

திருவண்ணமலை: ஸ்ரீ. டி. சிங்காரம் முதலியார், பஞ்சாயத் யூனியன், உயர்

நிலைத் துவக்கப் பள்ளி, நடுக்குப் பம்; ஸ்ரீ. வி. கன்னையா, S.K.P.D. உயர்நிலைத் துவக்கப்பள்ளி, திருவண்ணாமலை.

விழுப்புரம்: ஸ்ரீ. எஸ். சுப்பிரமணியம், கோஷல்சந்த் ஸீனியர் பேஸிக் பள்ளி, திண்டிவனம், ஸ்ரீ. டி. கே. நாராயணசாமி முதலியார், பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக்கப் பள்ளி, சாத்தம்பாடி.

கடலூர்: ஸ்ரீ. வி. வெங்கடராமஅய்யர், பஞ்சாயத் யூனியன் துவக்கப்பள்ளி கள்ளக்குறிச்சி; ஸ்ரீ. வி. குப்புசாமிக் கோன், பஞ்சாயத் யூனியன் உயர் நிலைத் துவக்கப்பள்ளி, திட்டக்குடி.

தஞ்சாவூர்-கிழக்கு: ஸ்ரீ. எஸ். சிவ சிதம்பரம் பிள்ளை, அருளாநந்தா உயர்நிலைப்பள்ளி, பள்ளங்கோயில் திருத்துறைப்பூண்டி; ஸ்ரீ. எஸ். சிங்காரவேலு முதலியார்.

தஞ்சாவூர்—மேற்கு: ஸ்ரீமதி நேசமணி அம்மாள், பஞ்சாயத் யூனியன் ஆதாரப் பள்ளி, ஒரத்தநாடு, ஸ்ரீ. டி. எஸ், சுவாமிநாத தேசிகர், பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக் கப்பள்ளி, திருவையாறு.

திருச்சிராப்பள்ளி: ஸ்ரீ. ஐ. ஏ. பீட்டர், ஆல் செயின்ட்ஸ் துவக்கப் பள்ளி, உரையூர்; ஸ்ரீ. எஸ்: எம். சொக்க லிங்கம் அரிசனப் பொதுநலப் பள்ளி, வராகனேரி.

புதுக்கோட்டை: ஸ்ரீ. எஸ். திருவேங் கடசாமி, பஞ்சாயத் யூனியன் உயர் நிலைத் துவக்கப் பள்ளி, ஆலங்குடி ஸ்ரீமதி ஏ. ரூத்கமலாபாய் ராணி, முனிசிபல் ஜூனியர் பேஸிக் பள்ளி புதுக்கோட்டை.

திண்டுக்கல்: ஸ்ரீ டி.கே. சுப்பிரமணியம் பத்தாவது வார்டு முனிசிபல் உயர் நிலைத் துவக்கப்பள்ளி,பெரியகுளம் ஸ்ரீ. எம். சிவசுப்ரமணியம், ஹௌதிய உயர்நிலைத் துவக்கப் பள்ளி, உதகமப்பாளையம்.

மதுரை: ஸ்ரீ. டி. சாம்யூல் கிங்ஸ்பரி, பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக்கப்பள்ளி தேனூர் மதுரை மேற்குப் பஞ்சாயத்து யூனியன். ஸ்ரீ. டி. எஸ். கிருஷ்ணராவ் பஞ்சா யத்யூனியன் பேசிக் பள்ளி, சுந்தர தாஸ் சத்திரம், திருமங்கலம்.

ராமநாதபுரம்: தோழர் வி. அருளாநந் தம், ராஜா எம். தினகர் ஸீனியர் பேசிக் பள்ளி, ராமநாதபுரம், ஸ்ரீ கே. ரங்கசாமி, பஞ்சாயத்யூனியன் உயர் நிலைத் துவக்கப் பள்ளி, கள்ளல்.

விருதுநகர்: ஸ்ரீ. டி. ஹென்றி ஜேஸு தாசன், C. S. I. உயர்நிலைத் துவக் கப் பள்ளி, தாயல்பட்டி; ஸ்ரீ. எஸ். ஏ. அந்தோணி க்ரூஸ், செண்ட் ஜோசப் R.C. சீனியர் பேசிக் பள்ளி ஸ்ரீவில்லிபுத்தூர்,

திருநெல்வேலி—வடக்கு: ஸ்ரீ எஸ். கே. பெருமாள்சாமி நாயுடு, பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக்கப் பள்ளி, சங்கரலிங்கபுரம், ஸ்ரீ ஏ. மாரியப்பன், லாயல் டெக்ஸ்டைல் மில்ஸ் ஜூனியர் பேசிக் பள்ளி, கோவில்பட்டி.

திருநெல்வேலி—மையம்: ஸ்ரீ ஜே. டி. செல்லையபாண்டியன், C.S.M. மேரி ஆர்டன் ஸீனியர் பேசிக் பள்ளி. பாளையங்கோட்டை. ஸ்ரீ எஸ்.சேது ராமநாதன், ஸ்ரீ கைலாசர் உயர் நிலை துவக்கப் பள்ளி, இடைக்கல்.

திருநெல்வேலி - தெற்கு: ஸ்ரீ கே. விண்ணப்பன் சாமுவேல், சிவப்ர காசம் வித்யாசாலை ஸீனியர் பேஸிக் பள்ளி, உதங்குடி, கிரிஸ் டியநகரம்; ஸ்ரீ. என். விக்டர் ஜான் ஸன், ஸேக்ரட் ஹார்ட் R. C. உயர் நிலைத் துவக்கப் பள்ளி, சாத்தங் குளம்.

ஈரோடு: ஸ்ரீ G. V. மகாதேவன், பஞ்சாயத் யூனியன் உயர்நி த் துவக்கப்பள்ளி, புஞ்செய்ப் புளியம் பட்டி; ஸ்ரீ. கே எஸ். ராமலிங்கம்,

S. S. V. சாலை துவக்கப் பள்ளி, கொடுமுடி.

கோயமுத்தூர் : ஸ்ரீ எம். ராமசாமிப் பிள்ளை, பஞ்சாயத் யூனியன் ஜூனியர் பேஸிக் பள்ளி, வெள்ளைக் கிணர்; ஸ்ரீ கே. ஸ். நாராயணசாமி அய்யர், வீராசாமி முதலியார் உயர் நிலைத் துவக்கப் பள்ளி, கோவை.

நீலகிரி : ஸ்ரீ. ஈ. வி. கிருஷ்ணராவ், பஞ்சாயத் யூனியன் ஜூனியர் பேஸிக் பள்ளி, ஹூப்பத்தலை, ஸ்ரீ என். சீரங்கிகௌண்டர், பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக்கப்பள்ளி, கிண்ணக்கோரை.

சேலம்: ஸ்ரீமதி வி. லக்ஷ்மி அம்மாள், பஞ்சாயத் யூனியன் துவக்கப் பள்ளி, பரநாட்ட மங்கலம்; ஸ்ரீ.கே. நரசிங்கராவ், பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக்கப் பள்ளி, ஏழாவது வார்ட், குமரப்பாளையம்.

தர்மபுரி: ஸ்ரீ. டி. தவமணி, பஞ்சாயத் யூனியன் உயர்நிலைத் துவக்கப் பள்ளி, சித்தல்பாடி ; ஸ்ரீ எல்.ஆர், பஞ்சநாதய்யர், பஞ்சாயத் யூனியன் துவக்கப் பள்ளி, லலிகம்.

கன்யாகுமரி : ஸ்ரீ. எஸ் மதுசூதன அய்யர், அரசியலார் உயர்நிலைத் துவக்கப் பள்ளி, ஈச்சன்விளை ; ஸ்ரீமதி ஜே. ஏ. செல்லம்மாள், அரசியலார் லோயர் பிரைமரிப் பள்ளி, வடிவீச்வரம்.

போற்றத்தகுந்த முறையிலே கல்வி கற்பிப்பதுடன் சமூக நலனுக்காக உழைத்துப் பெயர் பெற்று, மேற்படிப் பாராட்டையும்பெற்ற இந்த ஆசிரியர். ஆசிரியைகளுக்கு நமது வாழ்த்துக்களையும் பாராட்டையும் தெரிவிக்கின்றோம். இவ்வூக்கம் சிறிதும் குன்றாமல் இவர்கள் மேன்மேலும் உழைத்து, ஏனை ஆசிரியர், ஆசிரியைகளுக்குத் தக்க வழி காட்டிகளாக விளங்க வேண்டும் என வாழ்த்துகின்றோம். ஆசிரியர்களது அருந்தொண்டினைப் பொது மக்கள் கூட்டத்திலே பாராட்டிப் பரிசில் வழங்கும் அரும் பணி இயச் சென்னை இராச்சியம் முதன் முதலிலே ஆரம்பித்துச் செய்வது பாராட்டிற்குரியது. இப்பாராட்டுக் கூட்டத்தை நிறுவும் பெரியோர்கட்கும், பதக்கங்களும் பரிசில்களும் வழங்கு அரசியலார்க்கும் எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்து, இவ்வாறு ஆண்டுதோறும் இவ்விழாவினைச் சிறப்புறக் கொண்டாடி ஆசிரியர்களை ஊக்குவித்து, பொது மக்களும் ஆசிரிய ஆசிரியைகளது அருந்தொண்டினை நன்குணறுமாறு மேலும் ஆவன செய்யுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

செயலாளன் எழுதுங் கடிதங்கள் 10

53-ஆவது இராச்சியக் கல்வி மகாநாடு

ஆசிரியப் பெரியோர்களே,

வணக்கம், 53-வது இராச்சியக் கல்வி மாநாடு வருகிற மே மாதம் 16, 17, 18 தேதிகளில் கோவையில் நடைபெறும். மாநாடு சிறப்புற நிகழ ஏற்பாடுகள் நடக்கின்றன. கல்வி நிலையில் வேறுபாடின்றி அடிப்படைக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி ஈறுகப் பல்வகைத் தரங்களிலும் கல்வியின் நிலையைப் பற்றி ஆய்வதற்குப் பெரியோர்கள் பலர் கூடவிருக்கின்றனர். 15-ஆந் தேதி மாலை பொருட்காட்சி துவக்கப்பெறும்; 16-ந் தேதி காலை 10 மணிக்கு மாநாடு, கனம் கல்வி-நிதி அமைச்சர் முன்னிலையில் துவங்கும்.

பிரதிநிதிகள் தங்குவதற்கு பூ. சா. கோ. தொழில் நுணுக்கக் கல்லூரி விடுதியில் ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன. பொருட்காட்சிக்கும் உல்லாசப் பயணத்திற்கும் ஏற்பாடுகள் செய்யப்பெறுகின்றன, ஆசிரிய - ஆசிரியைகள் பிரதிநிதிகளாகப் பதிவு செய்துகொண்டு மாநாட்டை சிறப்புற நடத்த உதவி செய்யுமாறு வேண்டுகின்றேன். ஆசிரியர்க்கான ரயில் கட்டணச் சலுகை நீக்

கப் பெற்றிருப்பினும் ஆசிரியர் பலர் மா நாட்டில் பங்கு கொள்வார்கள் என நினைக்கிறேன்.

கல்வி-திட்டத்தைப் பற்றிய முடிவு இவ் யாண்டு அவசியம் ஆராயப் பெற வேண்டும்; ஆதலால் யாவருங் கூடி இது பற்றி ஆய்ந்து சிபார்சுகளை வெளியிடுவது நமது பணியாகும்.

இம்மாதம் முதல் "பாலர் கல்வி"யில் 24 பக்கங்கள் வெளியிட முடிவு செய்திருக்கிறோம். இதற்குக் கட்டுரைகள் மாதந்தோறும் தவறாது வந்து கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர்கள் அவ்வப்போது கட்டுரைகளை அனுப்பி எங்களை இப்பணியில் ஊக்குவிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

T. S. ராஜகோபாலன்

செயலர்

ஜியோமிதி—பாரதம் அளித்த வகை

T. S. ராஜகோபாலன், தலைமையாசிரியர்,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி

ஜியோமிதி என்ற சொல், நிலத்தின் அளவை எனப் பொருள்படும், அதாவது குலத்தை அளந்து வேண்டிய விவரங்களை அறியப் பயன்படும் நூல் ஜியோமிதியாகும். பண்டைக் காலத்தில் நாகரிகம் ஓங்கியிருந்த எகிப்திலும் நம் நாட்டிலுமே ஜியோமிதி பரந்திருந்து பயன் படுத்தப் பெற்று வந்தது. மேனாட்டினர். ஜியோமிதி நைலின் நன்கொடை என்கின்றனர். முன்பு எகிப்தில் நைல் நதியில் ஆண்டிற்கொரு முறை வெள்ளம் மிகுந்து, கரையோரங்களிலுள்ள விளை நிலங்களின் வரம்பினை அழித்து வந்ததால் அந்நாட்டு மன்னர், நிலங்களை அடிக்கடி செவ்வகமாகத் திருத்தி யமைக்க வேண்டியிருந்தது. இவ்வாறு செய்துவந்த பெரு முயற்சியின் விளைவாக, மக்கள் ஜியோமிதியை அறிந்து வளர்க்கலாயினர். ஆக மழை நீர் பெருக்கெடுத்து, நீர் நிரம்பி, நுரைத்துச் சீறி இழிந்த நைல், விளை நிலங்களை அழித்து, இவ்வாறு அழித்தும் அழியாத ஜியோமிதியை உலகினர்க்கு நல்கியுதவியது. நம் நாட்டிற் பண்டு பரவிவந்த ஜியோமிதி, வேதங்களின் கொடை என்று துணிந்து கூறலாகும். வேதங்களின் முதற் பகுதி, வேதங்களை வழிபட்டு, இந்த வழிபாட்டின் மூலம். மூலமாகிய இறைவனை வழிபடும் வகையைக் கூறும்; இரண்டாம் பிரிவு, வழிபடும் இறைவனுடைய இயல்பு. உருவம், குணம் முதலியவற்றைக் கூறும், தேவர்களை வழிபடும்போது, அவர்களுக்குப் பலி வேள்வியின் மூலமாக அளிக்க வேண்டியிருப்பதால், வேள்வி வேட்டும் வகையும், வேள்விக்காக வேண்டிய மேடைகளின் விதங்களும் அளவுகளும் விரிவாக வேதாங்கங்களில் பகரப்பெற்றுள்ளன. வேள்வி மேடைகளை அளக்கப் பயன்படும் நூற் கயிறு, வடமொழியில் சுல்வம் எனப்பட்டது; கல்வ் என்ற வினை அளப்பதைக் குறிக்கும். சூத்திரம் என்பது, செய்யவேண்டியவற்றை மனத்தில் எளிதில் ஏற்றுக்கொள்ளும் வண்ணஞ் சுருக்கமாக அமைந்துள்ள சொற்றொடரைக் காட்டும். ஆக, வேள்வி மேடைகளை அமைக்கும் வகைகள், அமைக்கப் பயன்பெறும் சுல்வம் என்ற கயிறு. இவை பற்றி விவரிக்கும் நூல் சுல்வ சூத்திரம் என வழங்கலாயிற்று.

கல்வி கரையில என்கிறோம். இவ்வாறே "அநந்தா வை வேதா;" என்கின்றனர். வேதங்கள் நான்கே யாயினும், அவற்றின் கிளைகள் பலப்பல. ரிக் வேதத்திற்குக் கிளைகள் 100; ஏனை வேதங்களுக்குக் கிளைகள் அடைவே 101, 1001, 15 ஆகும். ஒவ்வொரு கிளைக்கும் ஒரு சுல்வ சூத்திரம் இருந்தது. இப்போது நாம் அறிவன, போதாயனர், ஆபஸ்தம்பர், மனு, மைத்ராயணர், வராஹர், வாதூலர், காத்யாயனர் இவர்கள் அருளியவையாகும். இவற்றுள் ஐந்து, க்ருஷ்ண யஜுர் வேதத்திற்கானவை; காத்யாயனர் அருளியது சுக்ல யஜுர் வேதத்திற்கானது.

வேள்விச் சடங்கினுக்கு வேண்டிய தீ (அக்னி) மூவகைக் குண்டங்களில் வளர்க்கப் பெற்று வந்தமையால், தேவைக்கேற்ப கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி என மூவகைப்பட்டது. வேள்வி மேடையிற் செய்யப்பெறும் ஹோமம் அல்லது யாகம், நித்யம், காம்யம் என்று இரு வகைப்படும். நித்யம் என்பதால் அதனை ஒருவன் தவறாமற் செய்து வரவேண்டும் என்பது வெளிப்படை. ஒருவன், தனது விருப்பம் நிறைவேறுவதற்காகச் செய்யும் வேள்வி காம்யம் ஆகும். நாள்தோறும் செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாத ஒருவன் பெரும்பாவியாவான்; வேள்விக்காக வேண்டிய மேடையின் வடிவம் மாறினாலும், அளவு மாறினாலும், வழிபாட்டிற்கான மந்திரங்களிலும் விதிகளிலும் சிறிதேனும் பிழை நிகழ்ந்தாலும், விரும்பும் பயன் கைபுகாது. அன்றியும் வேள்வி செய்பவன் பெரும் பேயாகப் பிறக்க நேரிடும் என்பது முன்னோரது நம்பிக்கை. ஆதலால் வேள்வி மேடை அமைப்பதிலும், வேள்வியைப் பிழையறச் செய்வதிலும் நன்கு கவனம செலுத்தி வந்தனர். முன்னோர். இவ்வாறு கண்ணுங் கருத்துமாக ஒவ்வொன்றையும் கவனித்து இழுக்கில்லாமற் செய்ததால் நம் நாட்டில் ஜியோமிதி பரவி ஓங்கலாயிற்று,

எகிப்திய மக்களும் கயிற்றைப் பயன்படுத்தி நிலங்களை அளந்து செவ்வகங்களாக அமைத்து வந்தனர். இவ்வாறான பணியை யாற்றியவர் கயிறு இழுப்பவர்கள் (rope-stretchers) என்றழைக்கப்பட்டனர். நம் நாட்டிலும் ஜியோமிதியின் வளர்ச்சிக்கு இதே மாதிரியான கயிறு பயன்பட்டது வியப்பிற்குரியதன்றோ!

வேள்விகள், (i) இஷ்டி யக்ஞம் (வேள்வி), (ii) பசு யக்ஞம், (iii) ஸோமயக்ஞம் என்று மூவகைப்பட்டது. இஷ்டி யக்ஞத்தில் வெண்ணெய், பழம் முதலியன பலியாகப் பயன்பட்டன; பசு யக்ஞத்தில் ஆடுகள் (பசு என்பது பொதுவாக நான்கு கால்களையுடைய ஜந்துவைக் குறிக்கும்; நாம் பசு என்று வழங்கும் பிராணி கோ எனப்படும்) பலியிடப்பெற்றன; ஸோம யக்ஞத்தில் ஸோமம் என்ற ஒரு வகைக் கொடியின் சாறு பயன்பட்டது. ஸோம யக்ஞம் செய்வதும், அதில் விஞ்சிய ஸோமத்தைப் பருகி ஜரித்துக் கொள்வதும் மிகவும் கஷ்டமானதாகக் கருதப் பெற்றதால், இவ்வகை வேள்வியினை வேட்பவர் ஸௌம்யர் எனப் பாராட்டப் பெற்றனர்.

கார்ஹபத்யானிக்கு வேள்வி மேடை, சச்சதுரமாகும் என்பர் ஒரு சாரார், வட்ட வடிவம் என்பர் ஏனையோர். ஆஹவநீயாக்னிக்கு மேடை சச்சதுரமாக அமையவேண்டும்; தக்ஷிணாக்னிக்கு அரைவட்ட வடிவமாகும். இவை ஒவ்வொன்றின் பரப்பளவும் ஒரு சதுர வியாமம் ஆகும். வியாமம் என்பது 96 விரலளவு அல்லது அங்குலம். ஆக, இவ்வாறான மூவகை வேள்விகட்கும் மேடைகள் சமமான பரப்பளவுள்ளதாக இருக்க வேண்டியதால், இவற்றை அமைக்க ஒருவர் தெரிந்துகொள்ளவேண்டுவன;

1. குறித்த அளவுள்ள நேர்கோட்டைக் கொண்டு சதுரம் அமைப்பது.

2. ஒரு சதுரத்தின் பரப்பளவிற்குச் சமமாக வட்டம் அமைப்பது.

3. ஒரு வட்டத்தைப்போல் இருமடங்கு பரப்பளவுள்ள வட்டம் அமைப்பது.

4. சதுரம் ஒன்றின் மூலைவிட்டத்தைப் பக்கமாகக் கொண்டு நிருமிக்கும் சதுரம், முதற் சதுரத்தைப் போல் இருமடங்காகும்.

இவற்றுள் மூன்றாவதிற் பயன்படுவது $\sqrt{2}$ என்பதன் மதிப்பாகும் என்பது குறிக்கொள்ளலாகும்.

வேள்வி மேடைகள், மேலும் பலவாறான வடிவம் வாய்ந்தவை. இவற்றுள் முக்கியமானவை. (1) செவ்வகம், (2) இரு சம பக்க முக்கோணம், (3) இரு சம பக்க டிரபீஸியம். (4) ச்யேனை (பருந்து வடிவம்), (5) கங்கம் (கழுகு வடிவம்), இவை ஒவ்வொன்றின் பரப்பளவும் $7\frac{1}{2}$ சதுர புருஷ அளவாகும். அன்றியும் சில வேள்விகளில், சதுர வடிவமுள்ள இரண்டு மேடைகளின் மொத்தப் பரப்பளவிற்குச் சமமாகவும் வித்தியாசத்திற்குச் சமமாகவும், மேலே கூறியுள்ள வடிவங்களுக்குச் சமமாவும் சதுர மேடைகள் நிருமிக்க வேண்டியிருந்தன. இவற்றின் மூலமாக நம் முன்னோர் ஜியோமிதியில் பெற்ற ஆற்றலின் விவரம்:

1. கொடுத்துள்ள சதுரத்தின் மடங்கு அல்லது பின்ன அளவுள்ள சதுரம் அமைத்தல், அதாவது 2 மடங்கு. 3 மடங்கு. இவைபோன்ற பரப்பளவுள்ள சதுரம் அமைத்தல்.

2. இரண்டு சதுரங்களின் மொத்தப் பரப்பளவிற்கு அல்லது வித்தியாசத்திற்குச் சமமான சதுரம் அமைத்தல்,

3. ஒரு செவ்வகத்தை அதே பரப்பளவுள்ள சதுரமாக மாற்றி யமைப்பது,

4. ஒரு முக்கோணத்தை, அதே பரப்பளவுள்ள சதுரமாக மாற்றி யமைப்பது.

இவ்விவரங்கள் நீங்கலாக, மேடைகளின் பரப்பளவும் கன அளவுங் கணக்கிட வேண்டியிருந்ததால், ஜ்யோமிதியுடன் எண் கணிதமும் இணைந்து வளரலாயிற்று.

இதுவரையில் எடுத்துக் காட்டப்பெற்ற வடிவங்களை அமைப்பதற்கு முதன் முதலில் ஜியோமிதி வடிவங்களைப் பற்றிய பண்பாடுகளை ஒருவர் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். இவை கிரீஸ் நாட்டில் பிற்காலத்தில் நிருபிக்கப்பெற்று, தேற்றங்களாக அமைந்துள்ளன. பண்பாடுகளுட் சில, வடிவங்கள் அமைப்பதற்கு இன்றியமையாதனவாகும், இவை (Postulates) பாஸ்டுலேட்ஸ் எனப்படும். பாஸ்டுலேட் என்பதற்கு அரிஸ்டாடில் (Aristotle) என்ற கிரேக்கப் பெரியார் அளித்த இலக்கணம்: Whatever is assumed, though it is a matter for proof, and used without being proved அதாவது, நிருபிக்கக்கூடிய முக்கியமான பண்பாடு நிருபணமின்றி ஏற்கப்பெற்று, வடிவங்களை அமைக்கப் பயன்படுவனவாகும். இவ்வாறுள்ள பண்பாடுகளுள் மிகவும் முக்கியமானவை:

1. ஒரு வட்டத்தை, நாம் விரும்பும் வண்ணம் விட்டங்கள் வரைந்து சம துண்டுகளாக்க இயலும்.

2 ஒரு நேர்கோட்டை, நாம் விரும்பும் வண்ணம் சம துண்டங்களாகப் பிரிக்கலாம்.

3. செவ்வகத்தின் மூலைவிட்டங்கள் ஒவ்வொன்றும், செவ்வகத்தை இரண்டு சமபாகங்களாக்கப் பிரிக்கும்;

4. செவ்வகத்தின் மூலைவிட்டங்கள் ஒவ்வொன்றும் மற்றதன் இரு சமவெட்டியாகும்; இவை இரண்டும் செவ்வகத்தை நான்கு சம பாகங்களாகப் பிரிக்கும்.

5. சாய்சதுரத்தின் மூலைவட்டங்கள் ஒவ்வொன்றும் மற்றதை இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கும்; இவற்றினிடையே யுள்ள கோணம் செங்கோணமாகும்.

6. முக்கோணத்தின் பக்கங்களுள் ஒன்றினைச் சம பாகங்களாகப் பிரித்து, இவ்வாறு பிரிக்கும் புள்ளிகளின் வழியே மற்றப் பக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் இணை கோடுகள் வரைந்து, முக்கோணத்தைச் சம பரப்புள்ள சிறு முக்கோணங்களாகப் பிரிக்க இயலும்.

7. இரு சம பக்க முக்கோணத்தின் உச்சியையும் அடியின் மையப் புள்ளியையும் சேர்க்கும் நேர்கோடு, முக்கோணத்தை இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கும்.

8. சதுரத்தில் ஒரு பக்கத்தின் மையப் புள்ளியை எதிர் முனைகளுடன் சேர்த்துப் பெறும் முக்கோணத்தின் பரப்பளவு, சதுரத்தின் பரப்பளவிற் சரி பாதியாகும்

9. சதுரத்தின் பக்கங்களின் மையப் புள்ளிகளைச் சேர்த்துக் கிடைக்கும் சதுரத்தின் பரப்பளவு, முதற் சதுரத்தின் பரப்பளவிற் சரி பாதியாகும்.

10. செவ்வகத்தின் பக்கங்களின் மையப் புள்ளிகளைச் சேர்த்துக் கிடைக்கும் வடிவம், சாய்சதுரமாகும்.

11. ஓர் இணைகரமும் ஒரு செவ்வகமும் ஒரே அடிப்பக்கமும் ஒரே உயரமும் பெற்றிருந்தால், இவை இரண்டும் சம பரப்புடையனவாகும்.

12. கொடுத்துள்ள வட்டத்தில் வரையக்கூடிய சதுரங்களில் மிகப் பெரியது, முனைகள் வட்டத்தின் பரிதியில் அமைந்துள்ள சதுரமாகும்.

வேள்வி மேடையின் அமைப்பிற்குப் பயன்பட்ட கயிற்றின் இலக்கணம் வருமாறு :

அஜீர்ணா, க்ரந்திநீ, ஸூக்ஷ்மா
ச்லக்ஷ்ணா த்வரோமசா |
ரஜ்ஜுர் மாநாதிகா கார்யா,
அத்வரே யோக மிச்சதா ||

யதா க்ஷீயதே மாநம்,
யதா ந பரிவர்த்ததே |
யதா ச ரமதே த்ருஷ்டி :
ததா யோகம் ஸமாசரேத் ||

கயிறு அறுந்துவிடு மளவில் இருத்த லாகாது, வேண்டிய இடங்களில் முடிச்சுக்கள் அமைந்ததாக இருக்கவேண்டும். மெல்லியதாகவும் பிசிறு இல்லாமலும் இருக்கவேண்டும், பரப்புக்களைச் சேர்த்து மொத்த அளவைக் கணக்கிடப் பயன்படுவதாத வேண்டும், குறுகுவதும் நீள்வதும் செய்யாமல் கண்ணைக் கவருமாறும் இருத்தல் வேண்டும்.

கயிறு காட்டும் அளவு, கரணீ, தத்கரணீ, திர்யங்க்மாநீ, பார்சவமாநீ, அக்ஷ்ண்யா என்று ஐவகையாகும். நிலத்தின் எல்லையைக் காட்டப் பயன்படுவது கரணீ எனப்படும். "தத்ர க்ரியதே க்ஷேத்ர-பரிச்சேத : அநேந, இதி கரணீ" (இதனால் க்ஷேத்திரத்தின் அளவு காணப்படுவதால், இது கரணீ எனப்படுகிறது) என்பது கரணீ என்பதன் பொருளை விரிவாகக் கூறும் வாக்கியம். நிலத்தின் பரப்பளவைப்போல் இருமடங்கு, மும்மடங்கு, அரைப் பங்கு கால் பங்கு என்ற பலவகை அளவுகளுக்கு வேறு நிலங்கள் அமைக்கப் பயன்படும் அளவு தத்கரணீ என்பதாம். நிலத்தின் குறுக்களவு திர்யங்க்மாநீ, நீளத்தின் அளவு பார்ச்வமாநீ, மூலைவிட்டத்தின் அளவு அக்ஷ்ண்யா.

காத்யாயனரது சுல்வ சூத்திரத்திலிருந்து எடுத்துக் காட்டிற்காகச் சூத்திரங்கள் சில கொடுக்கப்பெற்றுள்ளன:

1. ஸமசதுரஸ்யஸ்ய அக்ஷ்ண்யா ரஜ்ஜு: த்விகரணீ | சதுரத்தின் மூலை விட்டத்தை அளக்கும் கயிறு, அந்தச் சதுரத்தைப்போல் இரு மடங்கு பரப்பளவுள்ள சதுரம் அமைக்க உதவும்.

2. த்வி : ப்ரமாணா சது : கரணீ, த்ரி: ப்ரமாணா நவகரணீ, சது: ப்ரமாணா ஷோடசகரணீ | சதுரத்தின் பக்கத்தைப்போல் இரு மடங்கு நீளமுள்ள கயிற்றால் நான்கு மடங்கு பரப்பளவுள்ள சதுரம் பெறலாகும். மும்மடங்கு நீளமுள்ள கயிற்றால் ஒன்பதின் மடங்கு பரப்பளவுள்ள சதுரம் பெறலாகும், நான்கு மடங்கு நீளமுள்ள கயிற்றால் பதினாறு மடங்கு பரப்பளவுள்ள சதுரம் பெறலாகும்.

3. அர்த்த ப்ரமாணேந பாதப்ரமாணம் விதீயதே | அரைப் பங்கு அளவுள்ள கயிற்றால் கால் பங்கு பரப்பளவுள்ள சதுரங் கிடைக்கும்.

4. த்ருதீயேந நவமோம்ச : | மூன்றிலொரு பங்கு அளவுள்ள கயிற்றால் ஒன்பதிலொரு பங்கு பரப்பளவுள்ள சதுரம் கிடைக்கும்,

ஆபஸ்தம்பரது சூத்திரங்களில் ஒன்று வருமாறு :

தீர்க்கஸ்யாக்ஷ்ண்யா ரஜ்ஜு: பார்ச்வமாநீ திர்யங்க்மாநீ சயத் ப்ருதக்பூதேந குருத: ததுபயம் கரோதி | செவ்வகத்தின் நீளம், அகலம் இவை ஒவ்வொன்றையும் காட்டும் கயிற்றால் அமைக்கப்பெறும் சதுரங்களின் மொத்தப் பரப்பளவை, மூலைவிட்டத்தைக் காட்டப் பயன்படும் கயிறு அமைக்க இயலும். இதுதான் பைதாகரஸ் (Pythogoras) என் என்பாரது தேற்றம்.

வேள்வி மேடை அமைப்பதற்கு முதன் முதலில் வேண்டுவது கிழக்கு-மேற்கு ஆதாரக் கோடு; இதற்குச் செங்குத்தாக வரையுங் கோடு தெற்கு-வடக்குக் கோடாகும். சமநிலத்தில் ஒரு கோலைச் செங்குத்தாக நிறுத்தி, கோலின் நிழலின் அமைப்பைக்கொண்டு கிழக்கு-மேற்குத் திசைகளைக் குறித்தனர். இதற்குச் செங்குத்து வரையும் முறைகள் பெரும்பாலும் இப்போது நாம் பயன்படுத்துவனவாகும்.

வேள்வி வகைகளுக்கான வடிவங்கள் பல. இஷ்டி யக்ஞம் என்பது அமாவாசை யன்றும் பூர்ணியமையன்றும் நிகழ்வது, பசு யக்ஞம் என்பது ஆண்டிற்கொரு முறை வர்ஷா காலத்தில் அமாவாசை யன்றுவது பூர்ணிமையன்றுவது நிகழ்வது; வருஷம் இரு முறையும் செய்யலாம்; இந்த வேள்விகளுக்கான வடிவங்கள்.

ப்ரௌக—இரு சம பக்க முக்கோணம்

த்ரோண—தொட்டி வடிவம்

கூர்ம—ஆமை வடிவம்

முதலியன; இவை ஒவ்வொன்றும் $7\frac{1}{2}$ சதுர புருஷ அளவுள்ளதாகும்.

சில வேள்விகளில் மேடை, 5 அடுக்கு கல் அமைந்ததாகும்; அதாவது முழங்

கால் வகையில் 32 அங்குலம் உயர முடையதாகும். கார்ஹ பத்ய அக்னிக்கு அடுக்கு ஒவ்வொன்றுக்கும் 21 கற்கள் வேண்டும். சதுரஸ்ர ச்யேநசித் என்பதற்கு 200 சதுரக் கற்கள் வேண்டும். இவற்றின் வடிவங்கள் மாறுபடும்போது அளவுகள் கணக்கிட வேண்டியிருந்ததால் கணக்கீட்டு முறைகளிலும் ஆற்றல் வேண்டியிருந்தது.

காம்ய அக்னிக்கு முதலில் மேடையின் பரப்பளவு $7\frac{1}{2}$ சதுர புருஷன் பரப்பளவுள்ளதாக இருக்கவேண்டும்; அடுத்த முறைகளில் முறையே $6\frac{1}{2}$, $9\frac{1}{2}$,...சதுர புருஷன் பரப்பளவுள்ளதாக வேண்டும். மேடைகளின் வடிவம் மாருமல் இருக்க வேண்டு மாதலால் விகித சமம், வடிவொப்பு-இவற்றிலும் ஆற்றல் வேண்டியிருந்தது.

நாளடைவில் கணக்கீட்டிற்குப் பயன்படுமாறு $\sqrt{2}$, π, முதலியவற்றின் மதிப்புக்களை ஆய்ந்தறிய முற்பட்டனர், நுண் மதியினர். $\sqrt{2}$ இன் மதிப்பு 1·4142156863 என்றும், π இன் மதிப்பு 3·141 109...., 3·157991 ... என்றும், $\frac{10}{\sqrt{3}}$, $\frac{12}{\sqrt{3}}$ $\frac{15}{\sqrt{3}}$ இவற்றின் மதிப்புக்களையுங் கணக்கிட்டனர். இவையன்றி அல்ஜிப்ரா முறைகளும் சில வகுக்கப் பெறலாயின. ஆக, நம் நாட்டில் நிலவி வந்த தெய்வபக்தியால் ஜ்யோமிதி, எண் கணிதம்,வான நூல், பீஜ கணிதம் இவை தழைத்தோங்கி வந்ததால், இவை வேதத்தின் நன்கொடை எனப் பகர்வது மிகையாகாது.

மருத்துவமும் விஞ்ஞானமும்

எஸ். ஜெயலட்சுமி : ஆறுமுக நாவலர் உயர் நிலைப் பள்ளி, சிதம்பரம்

"விஞ்ஞானம் அழிவுவேலைக்கு மட்டுமே" என்று இன்றும் ஒரு சாரார் நம்மிடையே வாதாடுகின்றனர். சான்றாக அணுகுண்டின் அழிப்புச்சக்தியை எடுத்துக்காட்டுகின்றனர். அவர்களுடைய வாதம் பொருத்தமுடையதன்று "விஞ்ஞானம் ஆக்கவேலைக்குப் பயன்படுகிறது" என்பதை நம் அன்றாட வாழ்வின் பல துறைகளில் பார்க்கிறோம். மனித சமுதாயம் உயர விஞ்ஞானத்தைப் பயன்படுத்த முடியும். விஞ்ஞானம் கொடிய எசமானன். ஆயின் பணிவுள்ள வேலையாள். விஞ்ஞானத்தை நாம் அடக்கி ஆண்டால், அதாவது அதனைத் தகுந்த முறையில் பயன்படுத்தினல் அது ஏவலாள் போல் நமக்குப் பணி புரியும். மருத்துவத் துறையில் விஞ்ஞானம் எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

மனிதன் இயற்கை விதிகளைத் தெரிந்தோ தெரியமலோ மீறும்போது அவனுக்கு நோய்கள் ஏற்படுகின்றன. நோய்களின் மூலகாரணம், பரவும் விதம் இவற்றை அறிந்துகொண்டால் நோயின் தொல்லையிருந்து விடுபடலாம். நோயின் காரணத்தை அறிதல், பாதிப்பின்மை (Gimmunity)ஏற்படுத்தல் ஆகிய துறைகளில் இன்று விஞ்ஞானம் பெருமளவு பயன்படுகிறது. விஞ்ஞானத் துறையில் தாம்செய்த ஆராய்ச்சிகளால் மருத்துவத் துறைக்கும் அளவற்ற பணி புரிந்த சில விஞ்ஞானிகளையும் அவர்கள் கண்டறிந்தவற்றையும் இங்கு ஆராய்வோம்.

1. எட்வர்ட் ஜென்னர் : பசு அம்மை (cow-pox) நோயால் துன்பமுற்றவருக்கு அம்மை நோய் வருவதில்லை" என்று ஜென்னர் கேள்வியுற்ருர். அவருக்கு ஓர் உண்மை புலப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டு பல ஆராய்ச்சிகள் செய்யத் தொடங்கினர். பெரியம்மை கண்டிருந்த ஒரு கன்றின் உடலிலிருந்து எதிர்நஞ்சை (antitoxin) எடுத்தது ஒரு சிறுவனின் உடலில் செலுத்தினர் பின்பு, அம்மை நோய்க் கிருமிகளை அச் சிறுவனின் உடலில் செலுத்தியும் அவனுக்கு அம்மை நோய் உண்டாகவில்லை.

ஒரு கன்றுக்குப் பெரியம்மை நோய் கண்டவுடன் அதன் உடலில் அந்த நோயைத் தடுக்க இயற்கையாகவே எதிர் நஞ்சு உண்டாகிறது. இந்த எதிர்நஞ்சை நம் உடலில் செலுத்திக்கொண்டால் அந்நோய் நமக்கு வருவதில்லை, ஜென்னர் இந்த உண்மையைக் கண்டறிந்தார். மாட்டுக்கன்றுகளுக்கு இலேசான அம்மை நோயை உண்டாக்கி, அவற்றின் அடிவயிற்றைக் கீறி அம்மைப்பாலை எடுத்து மனிதர்களின் உடலில் செலுத்தினால் அது இரத்தத்துடன் கலந்து பெரியம்மை நோயினின்றும் பாதுகாக்கிறது.

இவ்வாறு அம்மை குத்திக்கொள்வதின் அவசியத்தை கி.பி. 1896-இல் ஜென்னர் விளக்கினார். மானிட சமுதாயம் இவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. இவருடைய கருத்தை ஆதாரமாகக் கொண்டே, ஆந்த்ராஸ் (Anthras) நோயிலிருந்து மிருகங்கள் விடுதலை பெற லூயிபாஸ்டர் வழிகண்டறிந்தார்.

2. லூயி பாஸ்டர்: நோயைப் பரப்பும் கிருமிகளைப் பற்றி இவர் ஆராய்ச்சி செய்தார். நோய்க்கிருமிகள் காற்றில் மிதந்து கொண்டிருக்கின்றன என்பதை இவர் கண்டறிந்தார். நாம் அருந்தும் நீர், உண்ணும் உணவு, உட்கொள்ளும் காற்று இவற்றின் மூலம் நோய்க்கிருமிகள் உடலில் புகுந்து இரத்தத்தில் கலந்து பல கொடிய நோய்களை உண்டாக்குகின்றன என்பதை இவர் கண்டார். நோயை உண்டாக்கும் கிருமிகள் அடங்கிய மருந்தை ஊசியின் மூலம் உடலில் செலுத்தினால் நோயைத் தடுக்கலாம் என்றும் இவர் கண்டறிந்தார். இம்முறை இனாகுலேஷன் எனப்படும். ஐந்து ஆண்டுகள் இடைவிடாது முயன்று வெறிநாய்க்கடிக்கான (Rabies) சிகிச்சையையும் பாஸ்டர் கண்டுபிடித்தார்.

3. ஜோசப் லிஸ்டர்: பாஸ்டருடைய ஆராய்ச்சியையொட்டி லிஸ்டர் என்ற விஞ்ஞானி இரணசிகிச்சையில் பல புது முறைகளைக் கண்டறிந்தார். காற்றில் இருக்கும் நச்சுக் கிருமிகள் உடலில்உள்ள புண்ணில் புகுந்துவிடுவதால் புண் அழுகிப்போய்விடுகிறது. இதனால்நோய்க் கிருமிகள் பரவி புண்ணை ஆறவிடாமல் தடுக்கின்றன. தொற்றுநீக்கிய (Disinfectant)கருவிகளையும் மருந்து வகைகளையும் பயன்படுத்துவதால் நோய்க்கிருமிகள் உடலில் செல்லாமல் தடுக்கமுடியும் என்பதை இவர் நிரூபித்தார். நச்சடையா வகையில் காயத்தைக் கட்டும் முறையை (Antiseptic Dressing) இவர் கண்டறிந்தார். இரண சிகிச்சைத் துறையில் இம்முறை பெரும்பயன் தருகிறது.

4. ஜேம்ஸ் ஸிம்ஸன்: இவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த திறமை வாய்ந்த மருத்துவர். அறுவை மருத்துவம் செய்யும்போது, நோயாளி அடையும் துன்பத்தை எவ்வாறு தவிர்க்க முடியும் என இவர் ஆராய்ந்தார். பல ஆண்டுகள் இடைவிடாது ஆராய்ச்சி செய்து 1847 இல் ஒரு முடிவை வெளியிட்டார். உணர்வு போக்கியமான 'குளோரபாரம்' என்னும் மருந்தை நோயாளியின் சுவாசத்துடன் கலந்து உடலில் செலுத்தினால் அது மயக்கத்தைத் தந்து வலியுணர்ச்சியைப் போக்கும் என்பதை அவர் நிரூபித்தார். முதலில் எதிர்ப்புக்குள்ளாகிய இம்முறை பின்பு பிரபலமானது. இதையொட்டிய பல உணர்வு போக்கி மருந்துகள் இன்று பயன்படுத்தப்படுகின்றன.

5. க்யூரி அம்மையார்: இவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். இவரும் இவருடைய கணவரான பியரி க்யூரியும் சேர்ந்து 'ரேடியம்' என்னும் அரிய பொருளைக் கண்டறிந்தார். இருளிலும் ஒளி வீசும் இவ்வரிய உலோகத்தின் பண்புகளை இவர்கள் ஆராய்ந்தனர். முதல் உலகப் பெரும்போர் தொடங்கியதும் க்யூரி அம்மையார் போர் உதவி முயற்சிகளில் ஈடுபட்டார். எக்ஸ்-கதிர் கருவியைத் திருத்தியமைத்தார். இவர் கண்டறிந்த ரேடியம் மருத்துவ உலகில் பேருதவி புரிகிறது. ரேடியத்திலிருந்து வரும் கதிர்கள் மிக ஆற்றல் வாய்ந்தவை. இக்கதிர்கள் புற்றுநோயைப் போக்க உதவுகின்றன.

6. ராண்ட்ஜன்: இவர் ஜெர்மனியைச் சேர்ந்தவர். கி. பி. 1895ஆம் ஆண்டில் புதியதோர் ஒளியைக் கண்டறிந்தார். மின்சக்தி ஊடுருவிச் செல்ல முடியாத பொருளையும் இப்புதிய ஒளி ஊடுருவிச் சென்றது; இவ்வொளிக்கு எக்ஸ்-கதிர் என்று அவர் பெயரிட்டார். உடலுக்குள் ஏற்படும் எலும்பு முறிவு, புண்கள்,

தசைவளர்ச்சி இவற்றை எக்ஸ்-கதிர் மூலம் படம்பிடித்து அறிவதால் எளிதில் தகுந்த மருத்துவ உதவி அளிக்க முடிகிறது.

விஞ்ஞானிகளின் அரிய தொண்டுகள் மருத்துவத்துறையில் பெரும் மாற்றத்தை விளைவித்துள்ளன. சாவை ஒரேயடியாகத் தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகள் கண்டறியப்பட்டுள்ளன. செயற்கை நுரையீரல்களையும் செயற்கை உறுப்புகளையும் மனித உடலில் பொருத்தும் முயற்சி வெற்றிபெற்றுவிட்டது. இறந்தவனையும் ஐந்து நிமிட நேரம் உயிர்பிழைக்கச் செய்யும் விந்தை, விஞ்ஞானத்தின் அரிய சாதனை. எனவே "மருத்துவத் துறையில் விஞ்ஞானத்தின் பங்கு இன்றியமையாதது; பிரிக்க முடியாதது" என்று மேற்கூறியவற்றின் மூலம் நாம் அறியலாம்.

விஞ்ஞானச் செய்திகள்

கக்குவான். இளம்பிள்ளை வாதம். தொண்டை அடைப்பான், ஜன்னி ஆகிய நாலு நோய்களைக் கட்டுப்படுத்தும் சீம்பால் மருந்து ஒன்றை பிரிட்டனிலுள்ள கிளாக்ஸோ லாபரேடரீஸ் தயாரித்திருக்கிறது. 'குவாட்ரிலின்' என்று வர்த்தகப் பெயரிடப்பட்டுள்ள இந்த மருந்து இன்னும் சில தினங்களுக்குள் விற்பனைக்கு வரக்கூடும்.

"கக்குவான், இசிவு நோய், அம்மைக் கட்டு முதலிய நோய்கள் வராமல் தடுப்பதற்காக, ஒரு குழந்தைக்கு, ஐந்து வயது நிரம்புவதற்குள், தடுப்பு மருந்துகளை, எட்டுத் தடவை ஊசி மூலம் உடம்பில் செலுத்த வேண்டியிருக்கிறது. இவை தவிர, இளம்பிள்ளைவாதம் வராமல் தடுப்பதற்காக, தனியாக ஊசி மூலம் மருந்தை உடலில் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த நோய்கள் அனைத்தையும் தடுப்பதற்கு, 'குவாட்ரிலினை' ஐந்து தடவை உபயோகித்தால் போதும். குழந்தைக்கு மூன்று மாதம் ஆகும்போது முதல் தடவையாக 'குவாட்ரிலினை' ஊசி மூலம் உடம்பில் செலுத்த வேண்டும். நான்கு வாரம் கழித்து இரண்டாவது தடவையும், எட்டு வாரம் கழித்து மூன்றாவது தடவையும் 'குவாட்ரிலினை' உபயோகிக்க வேண்டும். பிறகு குழந்தைக்கு 15 மாதங்கள் நிரம்பும்போது ஒரு தடவையும் 'குவாட்ரிலினைக் கொடுத்தால் போதும்."

ஐந்தாண்டுகள் ஆராய்ச்சிக்குப் பிறகு 'குவாட்ரிலின்' தயாரிக்கப்பட்டது. சோதனைக் கட்டங்களிலும் இந்த மருந்து வெற்றி பெற்றது. பெல்ஃபாஸ்டிலுள்ள (வட அயர்லாந்து) குவீன்ஸ் யூனிவர்ஸிடியில் நுண் உயிரியல் பிரிவில் பேராசிரியராகப் பணியாற்றும் திரு. ஜி. டபிள்யூ. ஏ. டிக், இந்த மருந்தின் ஆற்றலை உறுதிப்படுத்துவதற்காக, பல சோதனைகளை நடத்தினார். சாதாரண சீம்பால் மருந்துகளைவிட, 'குவாட்ரிலின்' பல அம்சங்களில் சிறப்புடையது என்றும், இளம்பிள்ளைவாதத் தொற்றுநீரை விரைவில் அழித்து விடுகிறது என்றும், அவர் நடத்திய சோதனைகளிலிருந்து தெரிந்தது. (B. I. S.)

ஃ ஃ ஃ

அணு வெடிகளைக்கொண்டு செயற்கையாகத் துறைமுகங்களையும் கால்வாய்களையும் தோண்டலாம்; அதுதான் அணுவின் ஆற்றல் செய்யவல்ல ஆக்கப் பணிகளில் எல்லாம் முதன் முதலில் நடக்கக் கூடியது, உண்மையாகவே முக்கியமான பலனுள்ளது; மிகவும் சிக்கனமானது.

அணுவிலிருந்து மின்விசை தோற்றுவிக்கும் தொழில் இப்பொழுது புதிதாக ஆரம்புவிட்டுள்ளது; பலப்பல காரியங்களுக்கு உதவும் அணுக் கதிரியக்க ஐஸடோப்புகளைத் தயாரிக்கும் தொழில் நடந்து வருகிறது. பொருளாதாரத்தை மட்டும் கருத்தில் கொண்டு பார்த்தால் இவற்றைக் காட்டிலும் மிகவும் முக்கியமானது. அணு வெடிகளைக் கொண்டு பெருத்த அளவில் மண்ணைத் தோண்டுவது. நிலக்கரி, எண்ணெய் இவற்றை எரித்து மின்விசை உற்பத்தி செய்யும் தொழிலோடு, அணுமின்விசை உற்பத்தி போட்டியிடக்கூடிய நிலைமை இன்னும் வரவில்லை. அணுவைக் கொண்டு மின்விசை பெறுவதற்கு இன்னும் செலவு அதிகமாகத்தான் இருக்கிறது.

சிக்கனம் அதிகம்

ஆனுல், மண் தோண்டும் வேலைக்கு இன்று செலவானதைவிட இருபதில் ஒரு பங்கு, கூடினுல் பத்தில் ஒரு பங்குச் செலவில். அணு வெடிகளைப் பயன் படுத்தி வெற்றி பெறலாம்; கதிரியக்கம் பரவும் என்ற கவலையும் வேண்டியதில்லை என்று கூறுகிருர் அமெரிக்க அணு விசைக் குழுவின் துணை டைரக்டர்.

அம்புலியில் கிணறு வெட்ட

அம்புலிக்குப் போகும் விண்வெளி விமானிகள் அங்கு தண்ணீர் கொண்டு போக முடியாது. அம்புலித் தரையில் அழுத்தமான பாறையிலே அடைபட்டிருக்கும் தண்ணீரை வெளியே கொணர, அவர்கள் அத்தரைக்கடியில் ஒரு சிறிய அணு வெடியை வைத்து வேட்டுத் தீர்க்கலாம். அத்தகைய ஒரு வேட்டினுல் நூறு டன் தண்ணீர் கொதித்து வரும்; இது நூறு டன் தங்கத் துக்குச் சமம்.

ஹாவாய்த் தீவுக் கூட்டத்தில் இப் பொழுது "பேர்ள் ஹார்பர்" ஒன்றுதான் நல்ல துறைமுகம். அங்கு அணுவெடி களைக் கொண்டு பல துறைமுகங்களை அமைக்கலாம். அவை ஹாவாய்க்குப் பெரிய நன்மை பயக்கும். அங்குள்ள சின்னச் சின்னத் தீவுகளில் பற்பல துறைமுகங்களை அமைத்துவிட்டால், அவற்றில் வாழும் மக்களிடையே பொரு ளாதாரத் தொடர்பு வளரும்; சர்வதேசக் கப்பல்கள் அங்கு வந்து போகும். ஒவ்வொரு துறைமுகம் அமைக்கவும் ஏறக் குறையப் பத்து லட்சம் டாலர் செல வாகும். மக்கள் தொகை குறைவாக வுள்ள பகுதிகளில் துறைமுகங்கள் தோண்டப்படும்.

பிற நாடுகள் பின்பற்றும்

அணுவெடி கொண்டு மண்ணைத் தோண்டுதல் மற்ற முறைகளைக் காட்டி லும் மலிவாகும்; இதில் அபாயமும் இல்லை என்பதை அமெரிக்கா முதன் முதல் தனது நிலத்தில் செய்து காட்டிய தும், பிற நாடுகளும் இவ்வழியைப் பின் பற்றலாம்.

அணு வெடியின் ஆற்றலைப் பூமிக்கடி யில் பிடித்து வைத்து மின்விசை உற் பத்தி செய்ய வழி காண வேண்டும் என்ப தற்காக அமெரிக்கா "உழுபடைத் திட் டத்தில்" இரண்டு சோதனைகள்நடத்தி யுள்ளது. "நோம்", "ஸீபான்" என்ற பெயர்கள் உள்ள இவ்விரு சோதனை களும் விஞ்ஞானத் தகவல்களைக் கொடுத்திருக்கின்றன.

பணைச் செய்திகள்

கொத்தவரை விதைக்கு ஒரு புது மௌசு வந்திருக்கிறது. இதற்கு வெளி நாட்டு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு இலாபமடையலாம்.

கொத்தவரை விதையினின்று ஒரு வித பசை எடுக்கப்படுகிறது. சக்கையை மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்தலாம். சக்கையில் நிரம்ப புரதச்சத்து இருக் கிறது. ஆகையால் மாவுச்சத்துள்ள பண்டங்களோடு கலந்தே கொத்தவரை விதைச் சக்கையை மாடுகளுக்கு போட வேண்டும்.

தற்சமயம் 17,500 டன் கொத்தவரை விதைச் சக்கை நமது நாட்டில் தயாரிக் கப்படுகிறது.

கொத்தவரை விதைப் பசை வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

தற்சமயம் நாட்டில் நிலவும் யுத்த நிலையை கருதி விவசாயிகள் கொத் தவரை விதைப் பசையை ஏற்றுமதிக் காக தயாரிக்க முன்வர வேண்டும். சக்கையை தீவனத்துக்குப் பயன்படுத் திக் கொள்ளலாம்.

மஞ்சளில் அதிக மகசூல்

நிரம்ப உரம் இடவும். மஞ்சள் பயிரில் நிரம்ப மகசூல் பெற நிரம்ப உரம் போட வேண்டும் என்று கோயமுத்தூர் விவ சாய கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தார் கள் கூறுகிருர்கள்.

மஞ்சள், நிலத்திலிருந்து ஏராளமாக உரத்தை உறிஞ்சுகிறது. நிரம்ப மகசூல் பெற 20 வண்டி தொழுவ எருவும் 150 கிலோ கிராம் ஸூப்பர் பாஸ்பேட்டும் ஏக்கர் ஒன்றுக்கு இடவேண்டும் பொடாஷ் குறைவான நிலங்களுக

ஏக்கருக்கு 40 கிலோகிராம் மூரியேட் ஆப் பொடாஷ் போடவும்.

மேல் எருவாக கால்ஷியம் அமோனியம் நைட்ரேட்டை ஏக்கருக்கு 100 கிலோகிராம் வீதம் இரண்டு தடவைகளில் போடவும். நடவாகிய இரண்டாவது மாதத்தில் முதல் தடவையாகவும், ஒரு மாதம் கழித்து இரண்டாவது தடவையாகவும் இடவும். பயிருக்குப் பக்கத்தில் பயிரைவிட்டு நான்கு அங்குலம் தள்ளி வரிசையாகப் போடவும்.

செய்தித் திரட்டு

ராமலிங்கம் உயர்தர ஆரம்பப் பள்ளி, வேலூர் E.S.L.C. மாணவர்கள் பிரிவு உபசார விழா

22—3—63 அன்று மேற்படி விழா மேற்படி பள்ளியில் வேலூர் நகர் வட்ட பள்ளிகளின் ஆய்வாளர் திரு. N. S. இராஜகோபாலன் B. Sc., B. T., அவர்கள் தலைமையில் துவங்கியது பள்ளி நிர்வாகி திரு. R. மகாதேவ ஐயர் அனைவரையும் வரவேற்றார்.

E. S. L. C. பிள்ளைகளுக்கு மிக்க கடினமாக உழைத்து போதித்த ஆசிரியர்கள் ஐவருக்கும் அவர் வெகுமதிகளைக் கொடுத்தார்.

பின்னர் வேலூர் ஸ்ரீவெங்கடேஸ்வரா நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. J. கிருஷ்ணச் சார் B. A., B. Ed., பிள்ளைகளுக்கு வாழ்த்துக்களையும் அறிவுரைகளையும் கூறினார்.

பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. M. குமாரசாமி அவர்கள் நன்றி கூறிய பின்னர், தேனீர் விருந்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை நன்கொடையாளர் படத் திறப்பு விழா, புதுக்கட்டிடத் திறப்பு விழா

தமிழக ஆட்சிமன்றத்தின் தலைவர் உயர்திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களும், தமிழக அரசின் கல்வி நிதி அமைச்சர் உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்களும் செங்கற்பட்டு நூலக ஆணைக்குழுத் தலைவர் திரு.டி. புருஷோத்தம் அவர்களுக்கு, செங்கற்பட்டு மாவட்டத்தின் இரு பகுதிக் கல்வித் தலைவர்களும் பெண் பாடசாலைகளின் ஆய்வாளரும், கல்வித் துறையின் துணை இயக்குநர் திரு லாரன்சு அவர்களும் ஏனைய பலரும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலைக்கு 24—3—1963 வருகை புரிந்தனர்.

இந்துமத பாடசாலைக்கு ரூ. 20000 நன்கொடையளித்த, பெரியதொரு மண்டபங் கட்டுதற்குக் காரணமாயிருந்த, சென்னை கோடம்பாக்கம் ஏ. வி. எம். படப் பிடிப்பகத்தைத் திறம்பட நடத்தி வரும் அண்ணலார் திருவுருவப் படம் திறந்து வைக்கப் பெற்றது. திறப்பு விழாவிற்குத் தமிழகத்தின் ஆட்சிமன்றத் தலைவர் தலைமையேற்றார். நாட்டிலுள்ள தீமைகளெல்லாம் நீங்க வேண்டுமானால் நாட்டு மக்களுக்கு நல்ல கல்வி அளிக்கப்பட வேண்டும் என்றும் அத்தகைய கல்வி வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் அளிக்கப் படுவதை நேரில் கண்டது தமக்கு மகிழ்ச்சி அளித்தது என்றும், இப் பாடசாலைக்குக் கலை வள்ளல் ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் நிரம்பப் பொருளுதவி செய்துள்ளது பாராட்டத் தக்கது. என்றும் சபாநாயகர் கூறினார். இந்துமத பாடசாலைக்கு உதவி செய்வது நல்லதற்குக் கொடுத்ததாகும் என்றும் இப்பாடசாலையின் நடைமுறைகள் தமக்கு மிகவும் பிடிக்கிறது என்றும் கூறினார்.

திறந்து வைத்த அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் பேசுகையில் பாடசாலை தொடக்கத்திலிருந்து உயர்ந்த நாட்டுப் பணி புரிந்து வருகிறதென்றும், இங்கு வேலை செய்பவர்கள் மிகவும் பக்தியோடு பணி புரிகின்றார்கள் என்றும், உண்மையோடும் ஊக்கத்தோடும் வேலை செய்தால் பொது மக்களுடைய கவனத்தைக் கவர முடியும் என்றும், பொது மக்களில் தகுதியுடையவர்கள் கட்டாயம் உதவி செய்வார்கள் என்றும் கூறினார். உயர்திரு ஏ. வி. எம். மெய்யப்ப செட்டியார் அவர்களும் அவர் தம் வீட்டரசியார் இராஜேசுவரி அம்மையார் அவர்களும் அவர் தம் நன் மக்களும் கூரிய அறிவுடையவர்கள் என்றும், தாம் தேடும் பணம் நல்ல செயலுக்குப் பயன்பட

வேண்டும் என்று தெரிந்த அப்பெருந் தகையார் வாலாஜாபாத் இந்துமத பாட சாலைக்கு உதவி செய்தது மிகவும் சிறந்தது என்றும் இங்கு நிலையான அழகான கட்டிடமாக இருந்து அவர்கள் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்றும் இதை போல் பலரும் செய்வது நல்லது என்றும் கூறினார்.

பாடசாலைச் செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் யாவருக்கும் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

கிளைச் சங்க செய்திகள்

10—3—63 ஞாயிறு அன்று 30 சாரணர்களும் 3 சாரண ஆசிரியர்களும் "உத்தமர் கோவிலில்" சாரணர் முகாம் நடத்தினர். சாரண ஆசிரியர் திரு. T. S. சுந்தரராஜன், திரு. S. அனந்த நாராயணன், திரு. P. லக்ஷ்மி நாராயணன் சாரணப் பாடங்களை போதித்தனர். 9—3—63 சனி அன்று "பாடித் தீ" "Camp Fire" பள்ளியில் நடத்தப் பட்டது. ஞாயிறு மாலை 5-மணிக்கு பள்ளியை அடைந்தனர்.

சிவகங்கைத் தாலுகா தொடக்க ஆசிரியர் ஐக்கியக் கழக பேரவைக் கூட்டம் சிவகங்கை அ. ந. நடேசன் செட்டியார் உயர் தொடக்கப் பள்ளியில் 27—1—63-ல் தலைவர் திரு. எம். எஸ். அருள்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுச் செயலாளர் எம். முத்துக் கிருஷ்ணன் கடந்த ஆண்டு அறிக்கையும் வரவு செலவுக் கணக்கையும் படித்தார்.

தலைவர் தமது தொடக்க உரையில் ஆசிரியர்கள் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு உதவ முன்வர வேண்டும் என்றும், அரசாங்கத்துக்கு தேவையான உதவிகளை எல்லாம் அளிக்க ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும், ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் "பாலர் கல்வி" "தென்னிந்திய ஆசிரியர்" என்ற பத்திரிகைகளை வாங்கிப் பயனடைய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

பின் நடப்பு ஆண்டிற்கு திரு. எம். எஸ். அருள்சாமி அவர்கள் தலைவராகவும் திரு. எம். முத்துக்கிருஷ்ணன் அவர்கள் பொதுச் செயலாளராகவும், திரு. சி. இராயப்பா அவர்கள் காளையார் கோவில் வட்ட ஐக்கியக் கழக தலைவராகவும், திரு. எம். ஞானசேகரன் அவர்கள் செயலாளராகவும், திரு. எம். எஸ். ஞானப்பிரகாசம் அவர்கள் சிவகங்கை வட்ட ஐக்கியக் கழகத் தலைவராகவும், திரு. ஏ. ஆர். ராஜப்பன் செயலாளராகவும், மானா மதுரை வட்ட ஐக்கியக் கழகத்திற்கு திரு. எம். மரியசூசை அவர்கள் தலைவராகவும், திரு. டி. சேது அவர்கள் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செயற் குழு ஒன்றும் தணிக்கைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

கோவையில் நடைபெற இருக்கும் தென்னிந்திய ஆசிரியர் சங்க மாநில மாநாட்டிற்கு ஏராளமான பிரதிநிதிகள் கலந்து கொள்வதென்றும், "பாலர் கல்வி" "தென்னிந்திய ஆசிரியர்" ஆகிய பிரதிநிதிகளை கிளைக் கழகங்கள் வாங்குவது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சர்

ஸ்ரீ பக்தவத்ஸலம் பி.ஏ., பி.எல்., அவர்களிடம்

நெல்லை மாவட்ட ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் எய்டெட் முனிசிபல் பஞ்சாயத்து யூனியன்) சார்பாக 12—8—62ல் வீரவநல்லூரில் நெல்லை மாவட்ட ஆசிரியர் கழகம் விடுத்த வேண்டுகோள்

மாநில கல்வி அமைச்சர் அவர்களே!

ஆரம்பப் பள்ளியாசிரியர்கள் சம்பந்தப் பட்ட கீழ்கண்ட பிரச்னைகளைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். அவைகளைக் கவனித்து உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம்.

I. ஆசிரியர்-மாணவர் விகிதம்

G.O. *105395*/E. 2-6*1*; 52324-E·2-*61* (3-10-61) *19-1-62* தேதியிட்ட சுற்றறிக்கை:- இவற்றின்படி ஆசிரியர் மாணவர் விகிதம் *1.35* என்றும்; மொத்த மாணவர்களைக் கணக்கிடும்

பொழுது ஆசிரியருக்கு 35 ஆஜர் தேவை என்பது வற்புறுத்தப்படுகிறது. இதனால் பல ஆசிரியர்கள் நீக்கப்பட வேண்டியது வரும். வகுப்பைப் பிரிப்பதற்குச் செய்யப்படும் வேண்டுகோள் பெரும்பாலும் நிராகரிக்கப்படுகிறது 1.35 என்ற விகிதம் நடைமுறைக்கேற்றதல்ல ஏனெனில்

1) 5-11 வயதுக்குட்பட்ட 35 சிறுவர்களை ஒரு வகுப்பில் 5 மணி நேரம் வைத்து அவர்கள் கவனத்தைப் படிப்பில் திருப்புவது கடினம்.

2) எண், எழுத்து, வாசிப்பு, கைவேலை பண்பாடு இவை ஆரம்பக் கல்வியின் முக்கிய நோக்கம். ஒவ்வொரு மாணவனுக்கும் தனிக் கவனம் செலுத்த முடியாது.

3) மேலும் அநேக பாடசாலைகள் வாடகைக் கட்டிடங்களில் நடைபெறுகின்றன. 35 மாணவர்கள் இருப்பதற்கு வசதியாக மாற்றியமைப்பதோ அல்லது புதிதாக வகுப்பறைகள் கட்டுவதோ சுலபமல்ல. ஆகையால் 1.25 என்ற விகிதம் பொருத்தமாகும்

II. 55 வயது முடிந்தவர்களை வேலைக்கு அமர்த்தல்

முனிசிபல் பஞ்சாயத்து யூனியன் பாடசாலைகளில் வேலை பார்த்து 55 வயது முடிந்தவுடன் ஓய்வுபெறும் ஆசிரியர்களை மீண்டும் 60 வயது வரை வேலைக்கு அமர்த்திக்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகள் இருக்கின்றன.

(1) உடல் நலத்துக்கு அத்தாட்சி வேண்டும்.

(2) வெயிட்டிங் லிஸ்டில் ஆட்கள் இல்லாமலிருக்க வேண்டும்

(3) எம்ப்ளாய்மெண்ட் மூலம் ஆள் கிடைக்கவில்லை என்ற தகவல் வேண்டும் இந்த நிபந்தனைகளின்றி 60 வயது வரை வேலை பார்க்க உத்திரவர்க் வேண்டும்

III. ஆரம்பப் பாடசாலைகளில் செக்கண்டரிகிரேடு ஆசிரியர்கள்

5-வது வகுப்பில் 3 அல்லது அதிகமான பிரிவுகள் இருந்தால் ஏற்கனவே இருக்கும் செகண்டரி ஆசிரியருடன், மற்றுமொரு செகண்டரி கிரேடு ஆசிரியரை நியமிக்கலாம். ஆறு அல்லது அதற்கு மேல் பிரிவுகளிருந்தால் 2 ஆசிரியர்களை நியமிக்கலாமென்றிருக்கிறது. இதனால் ஆங்கில போதனை பலன் பெருது. 4-வது, 5-வது வகுப்புகளில் எத்தனை பிரிவுகள் இருக்கின்றனவோ அத்தனை செகண்டரிகிரேடு ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளவும், ஹையர் கிரேடு போஸ்டில் வேலை பார்க்கும் செகண்டரிகிரேடு ஆசிரியர்களுக்குச் செகண்டரிகிரேடு சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

IV. உயர்தொடக்கப்பள்ளிகளின் அபிவிருத்தி

1) ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும், ஒரு தமிழாசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர் நியமிக்கப்படவேண்டும் (மாணவர் எண்ணிக்கை நிபந்தனை இல்லாமல்).

2) தலைமையாசிரியரின் அலுவலக வேலைக்கு உதவியாக ஒரு கிளார்க் நியமனம் செய்து கொள்ள அனுமதியளிக்க வேண்டும்.

V. ஆசிரியர்களுக்கு வீடுகட்டும் திட்டம்

தூத்துக்குடி வட்டாரத்தில் ஆசிரியர்களுக்கு வீடுகட்ட 170 மனைகள் ஒதுக்கப்பட்டு அவற்றில் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று, ஸ்ரீவைகுண்டம் தாலூகா ஆசிரியர் யூனியன் முயற்சி செய்தது. 3 வருடங்களாகியும் ரெவினியூ டிப்பார்ட்மெண்டார் கவனம் செலுத்தாமல் அந்த வீடு கட்டும் திட்டம் நடைபெருமலிருக்கிறது. இதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுகிறோம். (Vide) R. S. No. 494 A/5 B. 2 மீளவிட்டான் கிராமம் தூத்துக்குடி ஏரியா.

VI. பென்ஷன் திட்டம்

ஜி ஓ. 1661—கல்வி 30-8-56 உதவியற்ற வயோதிகர்களுக்கு மாதம் 20 ரூபாய் உபகாரத் தொகை கொடுக்கப்படும் இந்த நேரத்தில், பட்டதாரியல்லாத ஒரு ஆசிரியரின் பென்ஷன் ரூ. 30/க்குக் குறைவாக இருக்கக்கூடாதென்றும், 1955-லிருந்து இந்த விகிதப்படி கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

எகோ (ECHO)

[எகோ (Echo) என்பது உலக ஆசிரியர் ஸம்மேளனத்தின் (World Confederation of Organisations of the Teaching Profession) மாத வெளியீடு. WCOTP என்பது இதன் சுருக்கப்பெயர். இனி, அச்சங்கத்தைக் குறிக்கும் இடங்களில் இச் சுருக்கப்பெயரையே (முதற்குறிப்புப்பெயரையே) வழங்குவோம். 'எகோ' என்னும் ஆங்கில ச்சொல்லின் மொழி பெயர்ப்பு 'எதிரொலி' என்பதாகும். WCOTP-இன் குறிக்கோள்களுக்கும் கருத்துக்களுக்கும் இணங்க அவ்வந்நாட்டு ஆசிரியர்சங்கங்கள் நடைபெற்றுவரும் முறையை இப்பத்திரிகை அறிவிக்கும். கீழ்க்காண்பவையனைத்தும் 1963 மார்ச் 'எகோ' வெளியீட்டின் மொழிபெயர்ப்பே ஆகும்.]

ரஸ்ஸல் பரிசு 1963.

கீழ்க் காணும் உறுப்புச்சங்கங்களுள் ஒன்றன் ஆசிரியரொருவர், வில்லியம் F. ரஸ்ஸல்' பரிசினைப் பெறுதற்கு, இவ்வாண்டுக் கோடையில் பிரேஸில் நாட்டில் கூடும் பன்னிரண்டாவது WCOTP பிரதிநிதிகளின் மகாநாட்டுக்கு விஜயஞ் செய்வார்.

Danmarks Laererforening.
Syndicat national des Enseignants du Niger.
'சிங்கப்பூர் டீச்சர்ஸ் நேஷனல் காங்கிரஸ்.
(Singapore Teachers' National Congress)

மேலே காணும் நிழற்படத்தில் நடுவில் உள்ளவர் 'ஸெக்ரடரி ஜெனரல் வில்லியம் G. கார்'. இடப்பக்கத்தில் உள்ளவர் 'பூர்டோ ரிக்கோ' வைச் சார்ந்த 'ஜோஸ் ரிவீரா' என்பவர். இவர்கள் முன்னிலையில், 'சில்லி' நாட்டைச் சார்ந்த 'டாக்டர் 'இர்மா ஸலாஸ்' என்பவர், மூன்று சங்கங்களின் பெயர்களைத் திருவுளச்சீட்டுமூலம் எடுக்கின்றார். இவற்றுள் ஒவ்வொன்றும் பரிசினைப் பெறுதற்கு உரியோரின் பெயரைக் குறித்தனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படும். இறுதித்தேர்வு WCOTP நிர்வாகக்குழுவினரால் செய்யப்படும்.

டாக்டர் ரஸ்ஸல் தம் வாழ்க்கைமுழுதும் பல நாட்டுக்கல்விக்குத் தொண்டுசெய்தவர்; WOTP-இன் தலைவராய் இருந்தார். WOTP என்பது பின்னர் WCTOP ஆயிற்று. அவர் WOTP சங்கத்தலைவராய் இருந்த பொழுது, WOTP, IFTA, FIPESO என்னும் மூன்று உலக ஆசிரியர் சங்கங்களையும் ஒன்றாக இணைத்து, 1952-இல் உலக ஆசிரியர் ஸம்மேள

னத்தை அமைப்பதற்கு ஓய்வொழிவின்றி அரும்பாடுபட்டார். "டாக்டர் ஸலாஸ் ? 'சில்லி' பல்கலைக்கழகத்தின் பொதுக்கல்வித்துறையின் டைரக்டர்; புகழ் பெற்ற நூலாசிரியர். அவர் எழுதிய நூல் 'பனோரமா' என்னும் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. அவர் அமெரிக்கப்பேரறிஞரான 'ரஸ்ஸலை' நன்கு அறிந்தவர்; அவரிடம் மிக்க மதிப்புள்ளவர்.

* * *

1961-இல் 'பொறுப்புக்குரிய கல்வி' என்னும் விஷயம் உலக ஆசிரியர் மகாநாட்டில் ஆராயப்பட்டது. அதைத்தொடர்ந்து கருத்துக்களைப்பரப்ப UNESCO WCOTP ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. VCOTP-இன் நான்கு உறுப்புச்சங்கங்கள் இத் திட்டத்தின்கீழ்ச் சில சிறப்புத்திட்டங்களை மேற்கொண்டுள்ளன.

அயர்லந்து தொழிற்கல்வியாசிரியர் சங்கம்:

(ஐரிஷ் வொகேஷனல் டீச்சர்ஸ் அஸோஸியேஷன்)

கட்டாயக்கல்விக்குப்பின்னர், கலாசாலைகளைவிட்டு வில நம் மாணாக்கர்க்கு (அயர்லந்து, இங்கிலாந்து, சில ஐரோப்பிய நாடுகள் ஆகிய இவற்றில்) வேலைநேரத்துக்குப் பிறகு கற்பிக்கப்படும் கல்விமுறைகளை ஒப்பிட்டு ஆராய்ந்தறிதல்.

கொரியா நாட்டின் கல்விச்சங்கங்களின் ஸமஷ்டி:

(கொரியன் பெடரேஷன் ஆவ் எடுகேஷன் அஸோஸியேஷன்ஸ்)

கொரியாநாட்டு செகண்டரி பாடசாலைகளில் கற்பிக்கப்படும் குடிமைக்கல்வியின் தரத்தைக் கீழ்க் காணும் வகைகளில் ஆராய்தல்: (a) பாடத்திட்டங்கள் பாடப்புத்தகங்கள் இவற்றைப் பகுதிபகுதியாக ஆராய்தல்; (b) போதனைக்கருவிகள் தயாரித்தல்; (c) வரையறைக்குட்பட்டுச் சோதனை வகுப்புக்களைப் பயன்படுத்தல்; (d) மாணாக்கரின் வகுப்புத்திறன்மதிப்பீட்டையும் இறுதித்தேர்வின் மதிப்பீட்டையும் ஒப்புநோக்குதல்.

ஸ்காட்லாந்து நாட்டுக் கல்விக்கழகம்:

(எடுகேஷனல் இன்ஸ்டிடியூட் ஆவ் ஸ்காட்லாந்து)

தீய நெறியிற் செல்லும் மனப்பான்மையைப் பெற்று அதனோடு இடவசதியும் வாழ்க்கைவசதியும் அற்ற குழந்தைகளைப்பற்றி இதுவரை ஆராய்ந்தறிந்ததை மேலும் தொடர்ந்து ஆராய்தல்: (a) 'ஸ்டாட்' என்பவர் புதிதாகப் படைத்துள்ள - குழந்தைகள் பிற்காலத்தில் செய்யக் கூடிய குற்றத்தின் அளவை முன்கூட்டி அறிவிக்கும்-கருவியின் மதிப்பினைச் சோதித்துணர்தல்; (b) சமூகத்தோடு ஒட்டி அனுசரித்துப் பழகுதற்குரிய முறைகளை ஆராய்ந்து வெளியிட்டுள்ள 'பிரிஸ்டல்' நகர வழிகாட்டிகளை, குழந்தைகளின் வயது வகுப்பு பழக்கவழக்கங்கள் முதலியவற்றினுக்கு ஏற்ப அனைவரும் ஒப்புக்கொள்ளும் முறையில் தரம்பிரித்து வகுத்து அமைத்தல்; (c) குழந்தைகளின் நிகழ்காலவருங்காலக் குற்றச்செயல்கள், பொதுவாக ஆசிரியர் பெற்றோர் முதலியோருடன் நன்கு பழகத் தெரியாமை இவற்றினுக்கும், குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் மட்டம்போடுதற்கும் இடையே உள்ள தொடர்பினை ஆராய்ந்தறிதல்.

தங்கனீகா தேசிய ஆசிரியர் சங்கம்:

(தங்கனீகா நேஷனல் யூனியன் ஆவ் டீச்சர்ஸ்)

பொறுப்புக்குரிய கல்வியின் வளர்ச்சியில் ஆசிரியர்க்கு உள்ள பங்கினைப்பற்றிப் பொதுமக்கட்கு உணர்த்த நாடுமுழுதும் பிரசாரம்செய்தல்: (a) மேற்குறிப்பிட்ட சங்கத்தின் நிர்வாகக்குழுவினருள் இருவர், பற்பல பகுதிகளிலும் உள்ள ஆசிரியர்சங்கத்தோடு இதனைப்பற்றி ஆவனசெய்தற்காகக் கலந்து பேசுதல்; (b) சமூகப்பழக்கத்திற்கும் பொறுப்பேற்பதற்கும் உதவக்கூடிய பாடத்தொடர்புடைய செயல்முறைகளையும் அத்தொடர்பற்ற பிற செயல்முறைகளையும் ஒட்டிய திட்டங்களை வகுப்பதற்காக நான்கு பிராந்தியங்களில் ஆராய்ச்சிக்கூட்டங்களைக் கூட்டுதல்; (c) 'பொறுப்பினை வளர்க்கும் கல்வி'யில் ஆசிரியர்க்கு உரிய பங்கினை அறிவிக்கும் இறுதியாதாஸ்தைத் தயாரித்தல்.

வெனிஸ்-ஏலா நாட்டு ஆசிரியர்கொலையைக் கண்டித்தல்:

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில், 'காரகாஸ்' என்னும் இடத்தில் உள்ள 'ஜுவன் விசென்டி கன்ஸலே' உயர்நிலைப்பள்ளியில் வகுப்பறையில் பாடங்கற்பித்துக்கொண்டிருந்த ஜோஸ் தாமீயன் ரொட்ரீக் லாப்ரடார் என்னும் கணக்குபௌதிக ஆசிரியரைப் பயங்கரஇளங்கொலைஞர்கூட்டமொன்று தாக்கிக் கொன்றது.

'பெடரேஸியன் வெனிஸோலனு டி மாஸ்ட்ரோ' என்னும் ஆசிரியர்சங்கம், இத்தகைய கொடுஞ்செயல் 'வெனிஸ்-ஏலா' நாட்டின் கல்விச்சரித்திரத்திலே கண்டிலாத இணையற்ற கொடுமை என்றும், நாட்டின் ஜனநாயக ஆட்சிமுறையை அழிப்பதற்கென்றே தோன்றிய சதித்திட்டத்தின் பகுதி என்றும் கருதுகின்றது—என்பதை வெளியிட்டுள்ளது.

மேற்கூறிய அச் சங்கம் கேட்கவும் சகிக்காத இப்பாதகச்செயலை உலகறியக் கண்டிக்கிறது; குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்கவேண்டுமென்று அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்கின்றது; கொலையுண்ட அவ்வாசிரியரின் குடும்பத்துக்குத் தக்க பொருளுதவியை அரசியலார் அளித்தல் வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றது; அன்றியும், 'வெனிஸ்-ஏலா' நாட்டின் பொதுக்கல்விமுறையின் நற்பெயரைக் காப்பாற்றுதற்காகப் பண்பாடு, கல்வி, அரசியல், பொருளாதாரம், சமூகநலம் ஆகிய துறைகளில் உழைக்குஞ் சங்கங்கள் யாவும் ஒன்றுபடல் வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றது.

WCOTP நிர்வாகக்குழுவின் அங்கத்தினரான 'ஓல்மான் ஸோடோ கான்ஸ்லே' என்பவர் சென்ற டிஸம்பர் மாதம் 'காரகாஸு'க்குச் சென்றிருந்தார். அவர் வகுப்பறையில் அவ்வாசிரியர் கொலையுண்ட கொடுஞ்செய்தியை 'ஸெகரடரி ஜனரல் வில்லியம் G. கார்' என்பவருக்கு அறிவித்துள்ளார். உலக ஆசிரியர் ஸம்மேளனம் கணவனை இழந்த அக் கைம்பெண்ணுக்கு தன் ஆழ்ந்த துக்கத்தைக் தெரிவித்துக்கொண்டது; அன்றியும், துக்கத்தில் மூழ்கியுள்ள அக் குடும்பத்துக்குத் தன் ஆதரவைக் காட்டும் முறையில் பொருளுதவியும் செய்துள்ளது.

x x x

ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் :

பசிப்பிணி விடுதலே வாரம்

மார்ச் 21 உ தொடங்குகின்றது. உலக ஆரோக்கிய நாள்: ஏப்ரல் 7.

'உலக ஆரோக்கிய நாள்' உலகம்முழுதும் ஒவ்வோர் ஆண்டும் பல நாடுகளில் உள்ள ஆரோக்கியச்சங்கங்களால் ஏப்ரல் 7-இல் கொண்டாடப் படுகின்றது. அது 1948-இல் WHO தொடக்கநாள் ஆதலின், அந்நாளின் ஆண்டுநிறைவுவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. கோடிக்கணக்கான மக்களே வாட்டும் பிணி பசி என்பது இவ்வாண்டுச் சிறப்பு விஷயம். இவ் விஷயம் FAOவின் பசிப்பிணிவிடுதலேயியக்கத்துக்கு ஆதரவாய் இருக்கும்; நோய்க்கும் ஆரோக்கியக்குறைவுக்கும் உணவுப்பற்றுக்குறையே நேர்க்-காரணம் என்பது வலியுறுத்தப்படும்.

x x x

ஸர்வதேசச்செய்தி:

புஷ்டியற்ற உணவே குழந்தையின் உடல்வளர்ச்சியின் தடைக்கு அடிப்படைக்காரணம். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிற தேசங்களிலும் உள்ள பள்ளிக்குழந்தைகளின் உடல்புஷ்டிநிலே சாதாரணமாக இருக்க-வேண்டியதற்கும் குறைந்தே உளது என்பதனே மீண்டும்மீண்டும் செய்த ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. உணவுக்குறையை நிறைவாக்க, அமெ-ரிக்க ஐக்கிய நாடுகள் இந்தியா முதலிய தேசங்களில், குறைந்த செலவில் அமைக்கப்பட்ட 'ப்ரோடீன்'மாவுச்சத்துக் கலந்த உணவினேப் பயன்-படுத்தி, பள்ளிக்குழந்தைகளுக்கு இடைவேளேயுணவு அளித்துவருகின்றனர். அம் முயற்சி வெற்றியளித்துள்ளது.

அமெரிக்கா ஐக்கியநாட்டில் உள்ள 'காலிபோர்னியா இன்ஸ்டிடியூட் ஆவ் டெக்னுலெஜி' என்னும் நிலேயம் தயாரித்தளிக்கும் பல சத்துக்களேக் கொண்ட கதம்பவுணவு (MPF) உணவுப்பற்றுக்குறையையும் 'ப்ரோடீன்'-குறையையும் நிறைவாக்கவேணடிய இன்றியமையாத 'வைடமின்'களேயும் உலோகங்களேயும் சேர்த்துச் சமைக்கப்பட்டுள்ளது. கோடிக்கணக்கானவர்க்கு உணவளிக்கும் ஸ்தாபனம் (The Meals for Millions Foundation) 1946-இலிருந்து 125 தேசங்களுக்குப் பல மில்லியன் பவுண்டு நிறை-யுள்ள இக் கதம்பவுணவினே வழங்கிவருகின்றது.

MPF (A Multi-Purpose Food) என்பது ஒருவகையுணவு. விலே-யதிகமுள்ள ஊன் ப்ரோடீன்ஸாக்கும் வைடமின் உலோகம் முதலியவை

குறைந்த சாதாரண புஷ்டியற்ற உணவுக்கும் ஈடாக; இதனைப் பயன்படுத்தலாம். பழக்கப்பட்ட உணவின் புஷ்டிசக்தியை மிகுவித்துப் பலப்படுத்தவும் இதனைப் பயன்படுத்தலாம். ஊன், மீன், கறியுணவுவகைகள் இவற்றேடு இதனைக் கலப்பின், இது மிக்க மணத்தை ஊட்டுகின்றது. இக் கதம்பத்தில் (MPF) இரண்டு அவுன்ஸ் உணவு,—அரைக்கால் பவுண்டு மாட்டுமாமிசம், வேகவைத்த ஓர் உருளைக்கிழங்கு, ஒருவேளையுணவுக்குப் போதிய பச்சைப்பட்டாணி, ஒரு கோப்பைப் பால் ஆகிய இவற்றினுக்கு ஈடான புஷ்டியை அளிக்கின்றது.

நல்ல புஷ்டியைக் குழந்தைக்கு அளிக்க நாள்தோறும் மூன்று வேளை உணவு இன்றியமையாதது. குழந்தைகளின் பழக்கப்பட்ட சாதாரண உணவுடன் இக் கதம்பமும் சேர்க்கப்படின், அது நல்ல பயனை அளிக்கின்றது என்பது பலரும் சோதித்துக்கண்ட முடிவு.

இந் நிலையம் WCOTP-க்குப் பத்தாயிரம் பவுண்டு கதம்பவுணவை அளித்துதவுதாகக் கூறியுள்ளது. இது ஆயிரம் அல்லது இரண்டாயிரம் பவுண்டு அளவுள்ள பகுதிகளாக அனுப்பப்படும். இது ஆசிரியர்சங்கங்களின்மூலம் விநியோகிக்கப்படும். இக் கதம்பவுணவினைப் பள்ளி இடைவேளையுணவுடன் அளித்து, அதன் பயனையும் மதிப்பையும் மருத்துவ யாதாஸ்து அல்லது ஆரோக்கிய யாதாஸ்துமூலம் அறிவித்தல் வேண்டும் என்னும் ஒரே நிபந்தனை இதற்கு உண்டு.

WCOTP செயலாளர்நிலையம், அக்கறையுள்ள உறுப்புச்சங்கத்துக்கு இன்னும் வேண்டிய அதிகப்படி செய்தியையும் கூறலாம்; அல்லது, அச் சங்கம் இந் நிலையத்தைக் (MMF) கேட்டறிந்துகொள்ளும்படி செய்யலாம்.

x x x

இந் நிழற்படம் 1963 ஜனவரி மாத வெளியீடாக வந்த அமெரிகாஸ் என்னும் பத்திரிகையில் உள்ளது. இதனை அளித்துதவியவர் ஜான் ப்ரைஸன். 'பிரேஸில்' நாட்டில் 'பர்ஹியா'-நகரில் உள்ள குழந்தைகள் தம் குவளை நிறையப் பாலைப் பெறுதற்கு வரிசையாக நிற்பதை இப் படம் காண்பிக்கிறது. ஒவ்வொரு நாளும் ஆங்குப் பால் 'பௌடர்', நீர், MPF உணவு இம் மூன்றனையும் மிகப் பெரிய அளவில் கலந்து, அக் கலப்புணவினைத் தேவையுள்ள 2000 குழந்தைகளுக்கு வழங்குகின்றனர்.

1963 ஜூன் மாதத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள (டி. c.) வாஷிங்டன் நகரில் 'காலூடட்' கல்லூரியில் ஸர்வதேசச் செவிடர் கல்வி மகாநாடு கூடும். இக் கல்வித்துறையில் முக்கிய கவனமும் அக்கறையும் கொண்டுள்ள நூற்றுக்கணக்கான அறிஞர் உலகின் பல பகுதிகளிலிருந்து அங்கு விஜயஞ்செய்வர்.

ஏறக்குறைய நாற்பது தேசங்களிலிருந்து வரும் பிரதிநிதிகள், செவிடருக்குக் கற்பிக்கவும் அவர்களை முன்னைய நன்னிலைக்குக் கொணரவும் மேற்கொள்ளவேண்டிய நவீனமுறைகளும் விஞ்ஞான உள்விவரமும் இம் மகாநாட்டில் விவாதிக்கும் பெருவிஷயங்கள். கீழ்க்கண்ட பரந்த தலைப்புக்களில், இவ்விஷயங்கள் இக் கல்வித்துறையில் தேர்ச்சியும் அநுபவமும் பெற்ற அறிஞர்களால் மகாநாட்டில் தொடங்கப்பெறும்: உடல்நிலை மனநிலை இவற்றின் மதிப்பீடு; செய்தியறிவித்தல் (பேச்சு, காதால் கேட்டல், உதடசைத்துப் படித்தல், சைகைகள்); கல்வி (ஐம்பொறியுணர்வு, கற்கும் மனப்பான்மை); பாடத்திட்டம்; சமூகபொருளாதாரமதிப்பீடு. ஜூன் 22–28: இவ்வேழ்நாள் மகாநாட்டில் நடைபெறுவதை பிரெஞ்சு, ஜர்மன், ஸ்பானிஷ் ஆங்கில மொழிகளில் ஒரே காலத்தில் விளக்கிக் கூறும் பொறுப்பு 'ஜார்ஜ்டவுன் இன்ஸ்டியூட் ஆவ் லாங்வேஜஸ் அண்டு லிங்விஸ்டிக்ஸ்'—என்னுங் கழகத்தைச் சார்ந்தது.

'செவிடர்கல்விக்குழுவே' (The council on Education of the Deaf) அங்கு வரும் விருந்தினரை உபசரிக்கும். இம் மகாநாட்டைப்பற்றிய செய்திகளை, The Executive Secretary, International Congress on Education of the Deaf Gallandet College, Washington 2, D. C — என்னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

x x x

UNESCO என்னும் ஸ்தாபனம் 'ஸ்டடி அப்ராட்' (Study Abroad) என்னும் ஸர்வதேசத்துணை நூலை 1963–இல் பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஆங்கிலம் என்னும் மூன்று மொழிகளில் வெளியிட்டுள்ளது. அது 745 பக்கங்கள் கொண்டது; 'பெல்லோஷிப்ஸ்' (Fellowshops), மானியப்படிப்பு (Scholarship), மாணுக்கரைப் பிறநாடுகளுக்கு அனுப்பியும் அந் நாட்டுமாணுக்கரைத் தம் நாட்டுக்கு வருவித்தும் கற்பிக்குந் திட்டங்கள் (Educational Exchange Programs) இவற்றை உட்கொண்டது. இவ் வெளியீட்டை அவ்வந் நாட்டில் UNESCO வெளியீடுகளை விற்போரிடமிருந்து மூன்று டாலருக்கோ அல்லது அதற்கு ஈடான அந்நாட்டுநாணயத்துக்கோ பெற்றுக்கொள்ளலாம்.

x x x

உலக ஆசிரியர் ஸம்மேளனம் (WCOTP)

1227, பதினாருந்தெரு, N. W., வாஷிங்டன் 6, D. c., U. S. A.

'எகோ' என்னும் இப் பத்திரிகை WCTOP-ஆல் மாதந்தோறும் ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ் என்னும் மொழிகளில், 'வாஷிங்டன்' D.C-யிலிருந்து வெளியிடப்படுகின்றது; அரபிமொழியில் 'பீரட்'டிலிருந்தும், ஜப்பான்மொழியில் 'டோக்கியோவிலிருந்தும், கொரிய மொழியில் 'சியோலி'லிருந்தும், போர்ச்சுகீஸில் 'ஸாபௌலோ'விலிருந்தும், 'வியட்நாம்' மொழியில் 'ஸைகோ'னிலிருந்தும் வெளியிடப்படுகின்றது. பிரத்தியேக ஆங்கிலப்பதிப்புக்கள் 'ஆக்ரா', 'நைரோபி', 'மதராஸ்' என்னும் இடங்களிலிருந்து வெளியிடப்படுகின்றன. இச் செலவில் ஒரு பகுதியை UNESCO ஸ்தாபனம் அளித்துதவுகின்றது. எகோ உறுப்புச்சங்கங்களுக்கு விநியோகப்படுத்தப்படுகின்றது. ஆயின், இதனைப் பெற விரும்புவோரும் நிலையங்களும் சந்தாவை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

ஸர் ரோனால்ட் கௌல்ட்,	**தலைவர்**
S. நடராஜன்,	**உபதலைவர்**
வில்லியம் G. கார்,	**செக்ரடரி-ஜனரல்**
ஜான் M. தாம்ஸன்,	**உதவி செக்ரடரி-ஜனரல்**
பால்டுவின் லி,	**டைரக்டர், இன்பர்மேஷன் ஸர்விஸஸ்**
பார்பாரா P. ஹாஸ்கின்ஸ்,	**ஆசிரியர் (Editor)**

துணை ஆசிரியர்கள்:

ராபர்ட் லாப்
ஜீன் பால் ஸவரி
ஜாகலின் லாஃபலர் (வாஷிங்டன், D.C.)
அ.ஃ.பி.ஃ.ப் பால்பகி (பீரட்)
ஹிரோஷி யோஷிடா (டோக்கியோ)
ட்ருட் ஹாப்ட்மான் (ஸா பௌலோ)
ட்ரான் பிச் லன் (ஸைகோன்)
S. நடராஜன் (மதராஸ்)
மியுங்ஸூ லிம் (ஸியோல்)

1963–இல் 'ரியோ'-இல் நிகழவிருக்கும் பிரதிநிதிகள்மகாநாட்டுடன் கலந்து நடத்த, அமெரிக்க நாடுகளிலிருந்து அறிஞர் பங்கெடுத்துக் கொள்ளல்வேண்டும் என்னும் முக்கிய வற்புறுத்தலோடு, மூன்று கல்வித் திட்டங்கள் (Three Study Projects) திட்டமிடப்பட்டுவருகின்றன. அம் மகாநாடு கூடுதற்குமுன்னர், கல்விப்பத்திரிகையாசிரியர் செயல்மன்றம் (educational editors workshop) நான்கு நாள் நடைபெறும்; அம் மகா–நாட்டுக்குப் பின்னர் இரண்டு சங்கக்கூட்டங்கள் (Seminars) நடைபெறும் ; அவற்றுள் ஒன்று ஆரோக்கியக்கல்வியைப்பற்றி ஒரு நாளும், மற்றொன்று விவசாயக்கல்வியைப்பற்றி நான்குநாளும் நடைபெறும்.

கல்விப்பத்திரிகையாசிரியர் செயல்மன்றம் — ஆகஸ்ட் 4-7

இச் செயல்மன்றம் WCTOP காரியாலயத்தின் ஆதரவில், 'டாக்டர் பால்டுவின் லீ'யை (டைரக்டர் ஆப் இன்ஃபர்மேஷன் ஸர்விஸஸ்) இணைப் பாளராகக் (Coordinator) கொண்டு நடைபெறுகிறது. சங்கநடவடிக்கை–களை ஆசிரியர்பத்திரிகைகள் வெளியிடல் வேண்டும் என்பதனை இது வற்புறுத்துகின்றது.

செயல்மன்றத்தில் பணியாற்றும் பத்திரிகையாசிரியர்கள் — அமெரிக்க நாடுகளின் சமகாலக்கல்வியில் உள்ள சிறப்புப்பகுதிகளைப்பற்றிய தங்கள் கருத்துக்கள் யாவை ? அவை நாட்டுக்கு நாடு எவ்வாறு மாறுபடுகின்றன ? பத்திரிகையாசிரியர்கொள்கைக்கு அவற்றின் அனுமானங்கள் எவையாக இருக்கலாம் ? — என்பனவற்றை முதற்கண் ஆராய்ந்து வெளியிடுதல் வேண்டும்; பின்னர், தம் பத்திரிகைள் தம்தம் ஆசிரியர்சங்கங்களின் கருவியாக ஆற்றும் பணிகளை விரித்துக்கூறுதல்வேண்டும்; 'ஆசிரியர்–சங்கங்கள் ஆசிரியத்தொழிலுக்கு' என்னும் பொருளைப்பற்றிக் கலந்து ஆராய்தல் வேண்டும்.

பின்னர், சங்கக்கூட்டத்தில் (Seminar), பத்திரிகையில் உள்ள விஷயங்களைப்பற்றிப் பகுத்தாராய்தல், அவற்றைத் தெளிவாக அறிமுகப்–

படுத்தும் முறை, அமைப்பு, அச்சிடும் முறைகள், பொருட்செலவுக்கு உரிய வருவாய்வகை இவற்றை யுள்ளிட்ட உள்விவரப்பகுதிகள் விளக்கப் படும்.

பத்திரிகையாசிரியரின் கடமையின் ஒவ்வொரு பகுதியைப்பற்றிய அநுபவக்கட்டுரைகள், கூட்டத்தில் ஆராய்தற்காக, அத் துறையில் கை தேர்ந்த அறிஞர்களால் ஸமர்ப்பிக்கப்படும். பின்னர், அவற்றைப்பற்றி அக் கூட்டத்தினர் பேசியும் எழுதியும் ஆராய்வர்.

ஆரோக்கியக்கல்விச் சங்கக்கூட்டம் : (Health Education Seminar)
ஆகஸ்ட் 14.

1960-இல் 'ஆம்ஸ்டர்டாம்' மகாநாட்டில் 'பள்ளியும் குழந்தை-யாரோக்கியமும்' என்னும் பொருள் விவாதிக்கப்பட்டது. அவ்வாண்டு-முதல், பிரதிநிதிகள்மகாநாடு (Delegates Assembly) கூடும்போதெல் லாம், ஆண்டுதோறும், ஆரோக்கியக்கல்விச் சங்கக்கூட்டமொன்றும் நிகழ்தல்வேண்டும் என்று WCOTP திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டு 'ரியோ' நகரில் நடைபெறும் மகாநாட்டில், பள்ளிகளில் உள்ள ஆரோக்கியத்திட்டங்களை ஆராயவும், முந்தின ஆண்டில் நிகழ்ந்த செயல்முறைகளைப்பற்றிய தம் கருத்துக்களை வெளியிடவும் ஆகஸ்ட் 14-ஆந் தேதி காலைப்பொழுது ஒதுக்கிவைக்கப்படும். இச் சங்கக்கூட்-டம் ICHPER என்னும் சங்கத்தால் நடத்தப்பெறும். அது WCOTP-இன் உறுப்பாகிய ஒரு ஸர்வதேசக் கிளைஸ்தாபனம். [ICHPER—International Council on Health, Physical Education and Recreation—தேகா ரோக்கியம், உடற்பயிற்சிக்கல்வி, பொழுதுபோக்கு, விளையாட்டு இவற்-றைப்பற்றி ஆராயும் ஸர்வதேசச் சங்கம்.] 'மிஸ் எல்ஸாஷ்னீடர்' என்பவர் இதன் 'கோஆர்டிநேடராகப் (Coordinator) பணியாற்றுவார். அவர் சில ஆண்டுகள், ஆரோக்கியக்கல்வியைப்பற்றிய விஷயங்களை தம்மை உசாவிய WCOTP-க்கு எடுத்துக்கூறிப் பணியாற்றிய அறிஞர். அன்று பிற்பகலில், ICHPER சங்கக்கூட்டத்தில் WCOTP-இன் மற்றொரு ஸர்வதேச கிளைஸ்தாபனமாகிய ICET-யும் கலந்துகொள்ளும். [ICET — The International Council on Education for Teaching — ஸர்வதேச போதனுமுறைக்கல்விக் கழகம்]. தேகஆரோக்கியக்கல்விக்கு ஆசிரியர் தயாரிக்கவேண்டியவை பற்றிய பிரச்சினைகள் அப்பொழுது விவாதிக்கப் படும்.

விவசாயக்கல்விச் சங்கக்கூட்டம் : (Agricultural Education Seminar)
ஆகஸ்ட் 14-17.

ஸெகண்டரிபள்ளிக்கூடவயதுள்ள மாணுக்கருக்கு நிலத்தில் வேலை-செய்தற்குவேண்டிய நூலறிவும் தொழில்நுட்பமும் அளிக்கும் பணியில் கிராமப்பள்ளியின் பங்கு யாது என்னும் விஷயத்தில், சென்ற ஆண்டில் 'ஸ்டாக்ஹோம்' நகரில் தொழிற்பயிற்சிக்கல்வியைப்பற்றி ஆராய்தற்குக் கூடிய சங்கக்கூட்டம் மிக்க கவனத்தைச் செலுத்தியது.

இவ்வாண்டில், 'ரியோ' நகரில் விவசாயக்கல்வியைப்பற்றி ஆராய்-தற்கு, காரியதரிசியின் காரியாலயம் (The Secretariat) சங்கக்கூட்டத்தைக் கூட்டி, அக் கூட்டம் நாலுநாள் நடைபெறச்செய்யும். WCOTP கிராமக்-கல்விச்சபை, WCOTP தொழிற்கல்விச்சபை, யந்திரக்கல்விச்சபை ஆகிய

இம்மூன்றும் சேர்ந்து இக் கூட்டத்தை நடத்த ஏற்பாடுசெய்யும். அக் கூட்டங்களுக்கு 'உருகுவே' நாட்டைச் சேர்ந்த கார்லோஸ் ஃபின் கார்ஸன்' என்னும் அறிஞர் தலைமைவகிப்பார். அமெரிக்க ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த 'மிஸ் லோயி க்ளார்க்' என்பவரும் அயர்லந்து நாட்டைச் சேர்ந்த 'சார்லஸ் மாக்கார்தி' என்பவரும் அக் கூட்டங்களின் நடவடிக்கைவிவரங்களை எழுதியனுப்புவர்.

சமூகத்தில் விவசாயியின் அந்தஸ்தும்பங்கும்பற்றிய ஆராய்ச்சி உள்ளிட்ட விவசாயத்தின் "சமூகப் பொருளாதார முக்கியத்துவம்" என்னும் விஷயம் ஆங்கு ஆராயப்படும். பயிர்த்தொழிற்கல்வியும் கிராமக் கல்வித்திட்டங்களும் அக் கூட்டநிகழ்ச்சிநிரலில் இடம்பெறும். இத் தலைப் பின்கீழ், பிழைப்பை நாடி 'பிரைமரி' பள்ளியையும் 'ஸெகெண்டரி' பள்ளியையும் விட்டுவிலகும் மாணுக்கர்க்கு உரிய கல்விமுறை (Terminal Eduction) ஆழ்ந்து யோசனை செய்யப்படும்; இதன்கீழ் மாணுக்கரை ஏதாவதொரு விவசாயவேலையில் தயார்செய்யும் முறையும் மேற்படிப்புக்கும் உயர்ந்த திறமையைப் பெறுதற்கும் வாய்ப்பளிக்கும் பிறவகைகளும் சேர்ந்து ஆராயப்படும். அச் சங்கக்கூட்டத்தின் ஆலோசனைகளின் முக்கியப்பகுதி இத் துறையில் ஆசிரியர்க்கு அளிக்கும் போதனுமுறைக்கல்வியேயாகும். விவசாயப்போதனுமுறைக் கல்வித்திட்டங்கள் தொழிற்பயிற்சிக்கல்வியோடு (Vocational Training) எவ்வகைத்தொடர்பு உடையனவாய் இருத்தல் வேண்டும்? ஆங்கு உள்ள சிறப்பு அநுகூலங்கள் யாவை? எவ்விதமான தகுதிப்பத்திரங்களை வழங்குதல் வேண்டும்?... இன்னோன்ன பிரச்சினைகள், சென்ற ஆண்டில் நிகழ்ந்த தொழிற்பயிற்சிக்கல்வியைப்பற்றிய சங்கக்கூட்டத்தில் எடுத்து விவாதிக்கப்பட்டன. இவ்வாண்டில் அவற்றைத் தனிமுறையில் ஆராய்ந்து கலந்தாலோசித்து முடிவுகாணுதல் வேண்டும்.

x x x

ஆஃப்ரிகா :

முன்பு 'குனட்லூல்' சாம்ராஜ்யத்துக்குரிய அரண்மனையாய் இருந்த மாளிகையைத் தலைமைக்காரியாலயமாகக் கொண்டு, புதிய 'எதியோப்பியா' பல்கலைக்கழமொன்றனை நிறுவுதற்குவேண்டிய உதவிசெய்யப் பல நாடுகள் ஒன்றுகூடி முயல்கின்றன. 'அந்நாட்டில் உள்ள ஏழரை மில்லியன் குழந்தைகளுள் நாலுசத விகிதத்துக்கும் குறைந்தவர்களே பள்ளியில் படிக்கின்றனர்; ஆயினும், அவரனைவரும் விடாமல் கடைசிவரை முற்றும் கற்கலாம் என்ற நியாயமான நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்'...என்று ஐக்கிய நாட்டுப் புள்ளிவிபரம் அறிவிக்கின்றது.

இப் புதுப் பல்கலைக்கழகஸ்தாபனத்தை ஆதரிப்போர், அந்நாட்டில் சுறுசுறுப்பும் முன்னேக்கமும் உள்ள தொழிலறிஞர் கூட்டத்தைப் படைத்தலே முக்கியத்துவம் வாய்ந்த முதற்பணியாகும் என்பதை உணர்கின்றனர். இத்தொழிலறிஞர் பின்னர் ஆதாரக்கல்விமுறைகளைத் திட்டமிட்டு வளர்த்தல் இயலும். இன்றைய ஆபிரிக்க நாடுகளுள் பெரும்பாலான இவற்றையே தம் இறுதிக்குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இப்பொழுது அந் நாட்டில் தகுதிபெற்ற ஆசிரியர் வேண்டிய அளவில் இலர். ஆயினும்,

அவர்கள் இருப்பவரை வைத்துக்கொண்டு திறம்படச் சமாளித்துக்கொள்ளத் தம்மாலான முயற்சியைச் செய்துவருகின்றனர். உத்தியோகத்தில் அமர்ந்துள்ள ஆசிரியர்களுக்கும் பொதுமக்கட்கும் அவரவர் தத்தம் தொழிலில் முன்னினும் அதிகமான தேர்ச்சியைப் பெறுதற்குரிய பயிற்சியை அளிக்கும் நிரந்தர நிலையமொன்றை WCOTP கிளைச்சங்கங்களுள் இதியோப்பியா நாட்டு ஆசிரியர்சங்கமொன்றே பெற்றுளது. அது மிகப்பரந்த முறையில் நூற்கல்வியும் செய்முறைப் பயிர்ச்சியும்ற்றிய வகுப்புக்களை நடத்துகின்றது.

'ஆபிரிகா ஆசிரியர்களின் நிலையைப்பற்றிய மேற்போக்கான விவரணம்' என்று WCOTP வெளியிட்டுள்ள தொழில்நுணுக்க அறிக்கையை ஆராய்ந்து கல்வி ஒலிபரப்பதிகாரி 'தங்கநீகா' ஒலிபரப்புச்சங்கத்தின்மூலம், தம் மதிப்புரையை அண்மையில் வெளியிட்டார்; உயர்தர ஆரம்ப பாடசாலையாசிரியருக்காக அமைக்கப்பட்ட அவ்வொலிபரப்புப்பகுதியில், அவ்வறிக்கையை வெளியிடுதற்காக அவர்கள் நேரில் விஜயஞ்செய்த நாடுகளின் பெயர்களையெல்லாம் குறிப்பிட்டார்; ஆபிரிகாவின் கல்விக்கொள்கையைப்பற்றி அறிதற்கு WCOTP கமிஷன் மேற்கொண்ட பேராய்ச்சியின் முதற்பகுதி இதுவே என்றும் சுட்டிக்காட்டினர்; அன்றியும், அவ்வறிக்கையில் தங்கநீகாவைப்பற்றிய முழுப்பகுதியையும், ஓரெழுத்தும் விடாமல், படித்து, ரேடியோமூலம் ஒலிபரப்பினர்.

இரு வர்ணத்தில் அச்சிடப்பட்ட இப் புதிய ஆபிரிகா தேசப் படம் (8''× 10'') WCOTP-இன் கிளைச்சங்கங்கள் உள்ள இடங்களைக் காட்டுகின்றது. இதன் பின்புறத்தில் ஆபிரிக உயர்தரக் கல்விநிலையங்களின் பெயர்களைக் காணலாம். வேண்டுவோர் தலைமைக்காரியாலயத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

'ஸ்வாஸிலாந்து' என்னும் நாட்டில் முதல்தரமான பலவின மக்களும் கலந்து கல்விபயிலும் கலைக்கூடமொன்று நிறுவுதற்கு இயலும் என்பதனை நிரூபித்துக்காட்டுதற்கு வகுத்த திட்டத்தை, புகழ்பெற்ற பிரிட்டிஷ் தலைவர்கள்பலரும் தென்னுபிரிகாத்தலைவர்கள் பலரும் ஆதரித்துள்ளனர். இப்புதுக்கலாசாலை 1963ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திறக்கப்படும். தென்னுபிரிக்காவில் எல்லா இனத்தவரின் குழந்தைகளும் வேற்றுமையின்றிக் கலந்து உயர்தரக்கல்வி பெறுதற்கு இடமளிக்குங் கலாசாலை இது ஒன்றே.

x x x

அரபு நாடுகள்

WCOTP 1963 'காலெண்டர்' (பஞ்சாங்கம்), அரபிமொழியில் அச்சிடப்பட்டு, அரபிமொழி பேசும் நாடுகளில் உள்ள ஏறக்குறைய பன்னீராயிரம் ஆசிரியர்கள் அரசியல் அதிகாரிகள் ஆசிரியர் சங்கத் தலைவர்கள் ஆகியோருக்கு, அச் சமஷ்டியின் 'பீரட்' வெளியீட்டு அலுவலகத்திலிருந்து விநியோகஞ்செய்யப்பட்டது. அதில் மே மாத ஏட்டில் வரையப்பட்ட படம், 'இராக்' நாட்டில் நவீன விவசாய முறைகளைக் கற்பிப்பதை தெளிவாக விளக்குகின்றது.

ஆஸ்திரேலியா : X X X

'நியூ ஸௌத் வேல்ஸ்' ஆசிரியர்சங்கத்தின் பத்திரிகையாகிய 'எடுகேஷன்' (கல்வி)–என்பதன் 1962–ஆம் ஆண்டு வெளியீடுகளில் ஆசிரியர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்குந் திட்டம் முதலிடம் பெற்றது. ஆசிரியர், மாணக்கர் இவ்விருவர்களின் தேவைநிலைகளையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது, மாணக்கரின் தேவைகளே அதிகம் கவனிக்கப்படுகின்றன; ஆயின், அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களோ, இன்றியமையாத வசதிகளும் போதிய இடமும் இல்லாத வீடுகளில் வசிக்கவேண்டியிருக்கின்றது!' —என்பதே அப் பத்திரிகையாசிரியர் எடுத்துக்கூறுங் குறை. சில பகுதிகளில் உள்ள வீடுகள் நன்கு கட்டப்பட்டிருந்தால், அங்கு உள்ள இடம் சௌக்கியமாய்க் குடியிருப்பதற்கு ஏற்றதாய் அமைந்திருக்கும் என்பதனை அப் பத்திரிகை ஒத்துக்கொள்கின்றது. "ஆயின், வேண்டிய அளவு பழுதுபார்த்துப் பராமரிக்கப்படாத எந்த வீடும் காலப் பருவநிலைமாறுபாட்டை எதிர்த்து நிற்றல் இயலாது". 'அரசியல் கல்வித் துறை அதிகாரிகள் சமீப காலத்தில், தம் கீழுள்ள ஆசிரியர்களுக்குப் போதிய வசதியுள்ள புதுவீடுகளைக் கட்டியுதவுதற்குச் சாத்தியமாகும் முறையில், தம் கொள்கையில் சில மாறுதல்களைச் செய்துள்ளனர். ஆயின், அப் பணியில் வேண்டிய அளவுக்குமேல் காலதாமதம் செய்யப்படுகின்றது'—என்பதே அப் பத்திரிகை ('Education') கூறுங் குறை. "இவ் வீடுகளில் பழுதுபார்த்தல் மிக இன்றியமையாதது" என்றும், "இவ்விவ் வீடுகள் குடியிருத்தற்குத் தகுதியற்றவை" என்றும், ஆசிரியர்கள் பலமுறை தம் குறைகளை எழுதியனுப்பிக் கூறியபின்னரே, அவைகள் கவனிக்கப்படுகின்றன."

அமெரிக்காஸ் :

'ட்ரினிடாட் டோபகோ ஆசிரியர் யூனிய'னின் புதுத்தலைவரான திரு. S. Z. ஆண்டிரூஸ், 'போர்ட்-ஆப்-ஸ்பெயின்' என்னும் நகரில் சென்ற டிஸெம்பர் மாதத்தில் தாம் அத் தலைமைப்பதவியில் அமர்த்தப்பட்டபொழுது, ஆசிரியரனைவரும் தம்மைத் தம் கடமைப்பணிக்காக மேலும் அர்ப்பணஞ்செய்ய மனவுறுதி கொள்ளல்வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். உலகில் அறியாமையை அகற்றத் தீவிரமாக அரும்பாடுபடுவோர்கூட்டத்தின் ஒரு பகுதியினரான ஆசிரியர் தாம் மேற்கொண்ட புதியனபடைக்கும் பணியில் தீவிரமாகப் பங்குகொள்கின்றனர் என்று தாம் கருதுவதாகக் கூறினர். ஆசிரியர் தம் பணியின் பயனை மக்கள்–வாழ்க்கையில் அழியாமல் பதியச்செய்வதுபோல் வேறு எத்துறையில் ஈடுபடுவோரும் செய்வதில்லை — என்பது அவர் நம்பிக்கை. திரு. ஆண்டிரூஸ்

தாம் ஆசிரியர்க்கு விடுத்த கிறிஸ்துமஸ்செய்தியில், WCOTP-இன் சர்வ தேச உறுப்பினரனைவரும் ஒருவரோடொருவர் ஒட்டி வாழ்தலும், சமஷ்டியை மேலும் விரிவுபடுத்தலுமே தம் குறிக்கோள் என்பதனை வெளியிட்டார்; பிரிக்க முடியாத இக் கல்விப்பணியில் ஈடுபடும் உலகவாசிரிய சகோதரர்களை (WCOTP), தாய்நாட்டில் தொண்டாற்றுந் தமக்குச் சமமான கூட்டாளிகளாகவே மதிப்பதாகவும் அறிவித்தார்.

ஐரோப்பா:

பிரிட்டிஷ் ஐக்கிய நாட்டின் 1963-ஆம் ஆண்டின் கல்விப்பிரசாரம் 'வெஸ்ட்மினிஸ்டர்'ரில் ஜனவரி 15-ஆந் தேதி தொடங்கிற்று. 'கான்டர்பெரி ஆர்ச்பிஷப்' அவர்கள், இஞ்சினீயரிங் ஐக்கிய சங்கத்தின் தலைவர், பிரிட்டிஷ் தேசீய ஐக்கிய ஆசிரியர்சங்கத்தின் (NUT) செயலாளரும் WCOTP-இன் தலைவருமான 'ஸர் ரொனல்ட் கௌல்ட்' என்பவர்—ஆகிய இம் மூவரும் அதனைத் தொடங்கிவைத்தனர்.

அரசியலார் கல்வித்துறையில் செலவிடுந் தொகையை அதிகப்படுத்தல் வேண்டும் என்பது அப் பிரசாரத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்ருகும். தற்பொழுது கல்விக்கு ஆண்டுதோறும் ஆயிரம் மில்லியன் பவுன் செலவிடப்படுகின்றது. பத்து ஆண்டுக்கு இச் செலவு இரட்டிப் பாக்கப்படும் என்பது நம்பப்படுகின்றது. அவ்வாறு இரட்டிக்குந் தொகையும், மாணுக்கர் பள்ளிக்கூடத்தை விட்டு விலகும் வயதினை அதிகப்படுத்தவோ, 'கௌண்டி' (மாவட்டம்) கல்லூரிகளை ஸ்தாபிக்கவோ, போதாது என்று கருதப்படுகின்றது. போதிய அளவு ஆசிரியரைத் தயார்செய்ய உயர்தரக்கல்வி மிக்க அளவில் விரிவடைதல் இன்றியமையாதது என்று எண்ணப்படுகின்றது. அப் பிரசாரக்குழுவினரின் யாதாஸ்து ஒன்று, நாட்டின் பிற்காலப்பொருள்நிலை கல்வியைப் பொறுத்ததாகும் என்றும், தற்பொழுதைய கல்விநிலை சமூகத்தின் தேவைக்குக் குறைவாகவே உள்ளது என்றும் கூறுகின்றது.

பிரிட்டனில், சிறு குழந்தைகளுக்கு 'நர்ஸரி' பாடசாலை ஒன்றுகூட இல்லை; குழந்தைகளுள் பெரும்பாலோர் சிறுவயதிலேயே பாடசாலைகளை விட்டு விலகுகின்றனர்; ஸர்வகலாசாலையில் பயில விரும்பும் எல்லா மாணுக்கருக்கும் போதிய இடம் கிடைக்கவில்லை; பள்ளிக்கூடவகுப்பு ஒவ்வொன்றிலும் மாணுக்கரின் தொகை அளவுக்குமேல் அதிகமாக இருக்கின்றது—மேற்கூறிய இக் குறைகளை நிறைவாக்குவதே அப் பிரசாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

கிரேக்க நாட்டுத் தொடக்கப்பள்ளிகள் ஸெகண்டரி பாடசாலைகள் இவற்றின் ஆசிரியர் ஏறத்தாழ முப்பதினுயிரவர் ஜனவரி 19-ஆந் தேதி வேலைநிறுத்தஞ் செய்தனர். அதற்குக் காரணம், தம்மைப்போல் சர்வகலாசாலைப்பட்டம்பெற்றவர்கள் அரசாங்கத்தின் பிற துறைகளில் பெறுஞ் சம்பளத்தைவிடத் தம் சம்பளம் 23 சதவிகிதம் முதல் 30-வரை குறைவாக உள்ளது என்பதாகும்.

அவ்வாசிரியர்கள் தொடர்ந்து இருபது நாட்கள் வேலைக்குப் போகவில்லை; வேலைக்குத் திரும்பவேண்டும் என்று அரசியலார் இட்ட கண்டிப்பான ஆணையையும் பொருட்படுத்தவில்லை. பின்னர், பிப்ரவரி ஏழாந்

தேதியன்று, அந்நாட்டுக் கல்வியமைச்சர், ஆசிரியரனைவரும் வேலைக்குத் திரும்பிவரல் வேண்டும் என்று 'கோர்ட்டு' நடவடிக்கைமூலம் கட்டாய உத்தரவைப் பிறப்பித்து, அதனை மீறினவர்க்குக் கடுந்தண்டனை விதிக்கப்படும் என்று வெருட்டினார். இந் நிர்ப்பந்தத்தால், பிப்ரவரி எட்டாந் தேதி, அவ்வாசிரியர்கள் வேறு வழியின்றித் தம் வேலைக்குத் திரும்பினர்.

பிரிட்டிஷாரனைவரும் அக் கிரேக்கவாசிரியர்களின் குறைகளையும் அவர்கள் படுந் துன்பங்களையும் அறிந்து, அவர்களின் பரிதாபகர நிலையைக் குறித்து மிக இரங்குகின்றனர் என்று 'லண்டன் டைம்ஸ்' என்னும் பத்திரிகை அறிவிக்கின்றது. வேலைநிறுத்தஞ்செய்த ஆசிரியர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அதனைக் கண்டிக்கும் முறையில் அவ்வாசிரியர்கள் அம் மாதச்சம்பளத்தைப் பெறுவதில்லை என்று தீர்மானித்தனர். அதனை அறிந்த அக் கிரேக்கநாட்டு ஆசிரியர்சங்கங்களும் தனித்தலைவர்களும் ஒன்றுகூடி, அரசியலார்செயலைக் கண்டித்து எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொருள்முட்டுப்பாட்டால் துன்புறும் ஆசிரியர்களுக்கு உதவ, 52000 பவுனுக்கு மேற்பட்ட தொகையை தாம் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுள்ளதாக அவ் வாசிரியர்சங்கங்கள் அறிவிக்கின்றன.

WCOTP-யின் ஸெக்ரிடரி-ஜெனரல் துன்புறும் கிரேக்கவாசிரியர்களுக்குத் தம் அநுதாபத்தைத் தெரிவித்துள்ளார்; அவர்களின் நிலையைப் பற்றிய செய்திகளைத் தமக்கு அவ்வப்பொழுது அறிவிக்குமாறு வேண்டிக்கொண்டுள்ளார்; அன்றியும், கிரீஸில் உள்ள WCOTP-யின் தேசீய கிளைச்சங்கங்களுடன் இதைக்குறித்துக் கடிதப்போக்குவரத்து வைத்துக் கொண்டுள்ளார்.

ஆசியா :

இயற்கைக்கோளாறுகளால், சென்ற இரண்டு மாத காலமாக மூன்று ஆசிரிய நாடுகள் பேராபத்துக்கு உள்ளாயிருக்கின்றன. அதனால் கல்வி வசதிகள் குறையவே, ஆசிரியர்களும் மாணாக்கரும் ஒருங்கு துன்பத்துக் குள்ளாயினர்.

மலேயாவில் உள்ள ப்ரூனி நகர், அதன் சரித்திரம் காணாத வெள்ளப் பெருக்காலும், உடைப்பாலும், நாசத்துக்குள்ளாயிற்று. WCOTP-யின் கிளைச்சங்கங்கள் யாவற்றினுக்கும் இவ்வாபத்துநிலையை அறிவிக்குமாறு ஸெக்ரிடரி ஜனரலை மலேயாநாட்டு ஆசிரியர்சங்கம் வேண்டிக்கொண்டுளது அவ்வாசிரியர்கள் தம் வீடுகளையும் சொத்துக்களையும் இழந்து வறுமையால் வாடி வருந்துகின்றனர்.

பிலிப்பைன் நாட்டில் உள்ள **மிண்டானோ** வட்டாரத்தில் பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டது. அந்நாட்டுப் 'பப்ளிக் ஸ்கூல் டீசர்ஸ் அஸோஸியேஷனுக்கு ஸெகரிடரி ஜனரலான 'ரிகார்டோ காஸ்ட்ரோ' என்பவர், அவ் வெள்ளச்சேதத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிக் குழந்தைகளுக்கு உடுக்க உடைகளை உதவுமாறு டாக்டர் காருக்கு எழுதியுள்ளார்.

ஜப்பானில் ஜனவரி பிப்ரவரி மாதங்களில் அடைபனி பெய்ததால், ஐந்நூறு பாடசாலைகள் சேதமாயின — என்னுஞ் செய்தியும் வந்துளது.

தென்ஜப்பானில் உள்ள சில பகுதிகளில் சென்ற நாற்பத்துமூன்று ஆண்டுகளில் பெய்யாத உறைபனி பெய்தது. முன்பு என்றும் காணுத அவ் வுறைபனியின் பாரத்தைந் தாங்க முடியாமல், சாதாரணத் தட்பவெப்ப-நிலைக்கு ஏற்றவாறு கட்டப்பட்ட பள்ளிக்கூடக்கட்டிடங்கள் விழுந்து நொறுங்கி அழிந்தன.

ஆசிய நாடுகளில் கொடிய விபத்துக்குள்ளாகியுள்ள இச் சகோதர வாசிரியர்களுக்கு உதவிசெய்ய விரும்பும் ஆசிரியர்பெருமக்கள், அவ்வந் நாட்டு ஆசிரியக் கிளைச்சங்கத்தின் விலாஸங்களை, WCOTP-இன் ஆண்டு அறிக்கையியிலிருந்து அறிந்துகொள்ளலாம்

∴ ∴ ∴ ∴

ஜப்பானிய ஆசிரியர்சங்கம் (WCOTP-இன் தேசீய கிளைச்சங்கம்)' ஸெகண்டரி பாடசாலைகளின் தொகையை மிகுதிப்படுத்துதல் வேண்டும் என்று போராடுவதாக 'ஸோஹியோ ந்யூஸ்' என்னும் பத்திரிகை அறிவிக்கின்றது. 'ஸெகண்டரி' பாடசாலைகளில் சேர விரும்புஞ் சிறுவர்–சிறுமியர் அனைவர்க்கும் அவ் வசதியை அளித்தல்வேண்டும் என்பதே அப் போராட்டத்தின் குறிக்கோள். அந் நாட்டின் கல்விக்கு ஆகுஞ் செலவின் ஒரு பகுதியைப் பெற்ருேர் கட்டாயமாக ஏற்கவேண்டும் என்றுள்ள அரசி-யல்விதிகளை ஒழிப்பதற்கு ஒழுங்கான செயல்முறையில் அச் சங்கம் முனைந்துள்ளது.

இவ் விரண்டு நோக்கங்களுக்கும் பொதுமக்களின் ஆதரவு மிகுதியாக உண்டு.

ஹாலந்து தேசத்தில், சில ஆண்டுகளாக, நவீன முறையில் கல்வி கற்பிப்பதற்கு மிக்க கவனஞ் செலுத்துகின்றனர். இக் காலப் பள்ளிச் சிறுவனின் உடல் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் ஏற்றவாறு நாற்காலி மேஜைகளைச் செய்து அமைகின்றனர். அதனுல், பழையமுறை சாய்வு மேஜைக்கு ஈடாகத் தனி மேஜைகளும், உயரத்துக்குத் தக்கவாறு அமைத்துக்கொள்ளக்கூடிய நாற்காலிகளும் அதிக அளவில் பயன் படுத்தப்படுகின்றன. இம் மேஜைகள் அதிக சுகத்தையும், இருத்தற்குப் பொருத்தமான உடல்நிலையையும், நல்ல படிப்பழக்கங்களையும் பெற உதவுகின்றன. இப்படம் 'நெதர்லண்ட்' நாட்டில் 'கிண்டர் கார்டன்' குழந்தைகளுக்கு நவீன முறையில் அமைக்கப்பட்ட வகுப்பறை.

அமெரிக்காஸ் :

பெஸபிக் மக்களின் ('பெஸ்பிக்'மகாஸமுத்திரத்தின் இருகரைகளையும் அடுத்துள்ள ஆசிய-வடஅமெரிக்கநாட்டினரின்) கல்வித்தரம் — என்பது காலிபோர்னியாவில் உள்ள 'ஸ்டான்பர்ட்' ஸர்வகலாசாலையில், மார்ச்சுமீ 28-ஆந்தேதி முதல் 30-ஆந் தேதிவரை கூடும் மகாநாட்டில் ஆராயப்படும் விஷயம். 'ஸ்டான்பர்ட் யூனிவர்ஸிடி ஸ்கூல் ஆப் எடுகேஷன்', 'ஸ்டான்பர்ட் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்' ஆகிய இவ்விரண்டின் ஒத்துழைப்புடன், 'அமெரிகன் அஸோஸியேஷன் ஆப் காலேஜஸ் ஆப் டீசர் எடுகேஷன்' (AACTE), என்னும் சங்கமும், 'கம்பாரடிவ் எடுகேஷன் ஸொஸைடி' என்னுஞ் சங்கமும் இம் மகாநாடு கூட்டுதற்கு ஆதரவு அளிக்கின்றன ; WCOTP-வின் ஆதரவும் இதற்கு உண்டு.

கீழ்க்கண்டோர் இம் மகாநாட்டில் பங்கெடுத்துக்கொள்வர் : ஆசியா கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றில் ஆசிரியர்பயிற்சியில் தொடர்புகொண்ட கல்வியாளர்; கல்விமுறைகளை ஒப்புநோக்கி ஆராய்பவர்; தேசீய முன்னேற்றத்திட்டங்களை வகுப்பவர் ; சரித்திரம், பூகோளம் 'ஸோஷல் ஸ்டடீஸ்' இவற்றின் ஆசிரியர்கள் ; இலக்கிய இலக்கண ஆசிரியர்கள் ; 'பெஸபிக்' சமூகத்தினரிடையே தொடர்பு அதிகரிக்கச் செய்ய விரும்பும் பொதுமக்கள்.

'ஸ்டான்பர்டி'ல் WCOTP-யும் ஒரு பொருட்காட்சியை அமைக்கும். அதில் தான் வெளியிட்ட நூல்களுள் பொறுக்கியெடுத்த சிலவும், சங்கவமைப்பினைக் காட்டும் பெரிய விளம்பரப்படமும் காணப்படும். வெனிஸுலா' நாட்டு அரசியல் கல்வித்துறையைச் சார்ந்த 'முதியோர் கல்விநிலையம்' ஆற்றிவரும் பல்வேறு செயல்களைக் கூறுஞ் சிறுநூலொன்று அண்மையில் வெளியிடப்பட்டுளது.

1958-இல் அந் நாட்டில் பத்து வயதுக்கு மேற்பட்டோருள் எழுதப் படிக்கத் தெரியாதவரின் சதவிகிதம் 38.4. அம் முதியோர் கல்விநிலையத்தின் பெருமுயற்சியால், 1962-இல் அவ்விகிதம் 16·4 ஆகக் குறைந்துவிட்டது. அந்நாட்டு ஜனத்தொகை 1,200,000 ஆகப் பெருகியிருக்கச் செய்தேயும், இவ்வாறு குறைந்திருப்பது மிகப் பாராட்டத் தக்கதே.

நூல்நிலையங்கள், கேட்டுங் கண்டும் உணர உதவுங் கருவிகள் (Audio-visual aids), சிறப்பான தொழிற்கல்விப் பாடசாலைகள், பொதுமக்கட் பண்பாடு வளர்க்கும் நிலையங்கள் ஆகியவற்றின் உதவியால், இப்பொழுது 'வெனிஸுலா' நாட்டு முதியோர் மேன்மேலும் படித்தற்குப் பல வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

அந் நாட்டு முதியோர்கல்வியதிகாரியான 'டாக்டர் ஸ்பெலிக்ஸ் ஆடம்' என்பவர் (WCOTP) முதியோர்கல்விக்குழுவின் அங்கத்தினராக இருந்தவர். அவ்வுலக சம்மேளனத்தின் பல ஆண்டுமகாநாடுகளுக்கும் அவர் விஜயஞ் செய்துள்ளார்.

'மணிடோபா'வில் உள்ள கானடா நாட்டு மாணுக்கர் பாடப்புத்தகங்களைப் பிறநாட்டுப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி, அதன்மூலம் பிறநாட்டாரின் நேர்த்தொடர்பினையும் நட்பினையும் அமைத்துக்கொண்டுள்ளனர். சென்ற இலையுதிர்பருவத்தில், 'வின்னிபெக்'கில் உள்ள 'கெல்வின் ஹைஸ்கூல்' மாணுக்கர்பலர் 400 பவுண்டு எடையுள்ள பாடப்புத்தகங்களை ஆசியாவுக்கு அனுப்பினர். அவை இப்பொழுது 'பிலிப்பைன்ஸி'ல் உள கப்பலில் ஏற்றி ஆசியாவுக்கு அனுப்பப்படும்.